# உரிமைக் குரல்



தமிழக முதல்வர்
டாக்டர்
மு.கருணாநிதி

13 APR 19
MADRAS
URIMAK KURAL by Karunanidhi (Mu)



# உரிமைக் குரல்

தமிழக முதல்வர்
டாக்டர்
மு. கருணாநிதி

13 APR 19..

# பதிப்புரை

முதல்வர் கலைஞர் அவர்கள் 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தமிழகச் சட்டமன்றப் பேரவையில் படைத்தளித்தார்; மொத்தத்தில் ரூ. 12 கோடியே 42 இலட்சம் துண்டு விழுந்தாலும், சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழும் ஏழை எளியவர்களை ஒரு சிறிதும் பாதிக்காமல்—மாறாகப் பல்வேறு நலன்களையும் சலுகைகளையும் வழங்கும் அந்த நிதிநிலை அறிக்கையின்மீது இரண்டு அவைகளின் உறுப்பினர்களும் நடத்திய விவாதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் 14-3-1974ல் பேரவையிலும், 15—3—1974ல் மேலவையிலும் ஆற்றிய பதிலுரைகளைத் தொகுத்து 'உரிமைக் குரல்' என்னும் தலைப்பில் நூலாக்கியிருக்கிறோம். வழக்கம்போல இந்நூல் 'தமிழரசு' 1—4—1974 இதழுடன் இலவச இணைப்பாக வழங்கப் பெறுகிறது.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

சென்னை,
26—3—'74.

# சட்டப் பேரவையில்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீது 77 உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவரையும் சேர்த்து, கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்திலே காரசாரமாகப் பேசியவர்களுக்கும், கடுமையாகப் பேசியவர்களுக்கும், நல்ல ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்களுக்கும், அரசு தன்னுடைய கடமையிலிருந்து எங்காவது நழுவிடுமானால் அதனைத் திருத்திக் கொள்கின்ற அளவிற்கு நல்ல செம்மையான வழி முறைகளைச் சொன்னவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியை இந்தக் கட்டத்தில் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது பாதிப் பேச்சு அவருடைய பேச்சாகவும் பாதிப் பேச்சு அறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாகவும் இருந்ததை நாமெல்லாம் கவனித்தோம். அண்ணா அவர்கள் 1957-லிருந்து 1962 வரையில் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்து அவர்கள் பல்வேறு கட்டங்களில் அவைகளைப் படித்துக் காட்டினார்கள். அண்ணா அவர்கள் அந்த உரையை 57—58-ஆம் ஆண்டிலே ஆற்றிய நேரத்தில் அந்த உரை, இந்த அளவிற்கு வரவேற்கப்படும்; இந்த அளவிற்குக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டு 'ஆகா!' எவ்வளவு அழகான வாதம், எவ்வளவு பொன்னான மொழிகள் என்றெல்லாம் சொல்லக்கூடிய ஒரு நாள் வருமென்று நாங்கள் அன்றைக்கு எதிர்பார்க்கவில்லை. அந்த நாள், இந்த நாளாக இருப்பதை எண்ணுகின்ற நேரத்தில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகின்றேன். அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில் பல பகுதிகளை, பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அன்று அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து உரையாற்றியபோது நம்முடைய நாடார் அவர்கள் இந்த அவையிலே இருந்தார்களா எனக் குறிப்பிட்டுக் கேட்டேன், இல்லை என்று சொன்னார்கள். ஒரு வேளை இருந்திருப்பார்களேயானால் அப்பொழுதே அவர்கள் எழுந்து ஆளுங்கட்சிக்கு அண்ணா அவர்களுடைய இந்த அறிவுரைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாக—அழுத்தந்திருத்தமாகக் கூறியிருப்பார்களென்று கருதுகிறேன்: ஆனால், அண்ணா அவர்களின் துரதிருஷ்டமோ அல்லது நாடு இன்னும் கொஞ்சம் கால தாமதமாகத்தான் நலன்களைப் பெற வேண்டுமென்று இருந்த காலமோ நமக்குப் புரியவில்லை. அப்பொழுது பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவையிலே இல்லாமல் போய்விட்டார்கள். . . .இருந்திருந்தால் . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எங்களுடைய அரசியல் கொள்கை வேறு. நான் உங்களுடைய கட்சியிலே நிச்சயமாக வர மாட்டேன். நான் அங்கும் இங்கும் மேற்கோளாகத்தான் எடுத்துக் காட்டினேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் இதையெல்லாம் செய்ய வேண்டுமென்பதைத்தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் தங்களை அழைக்கின்ற முயற்சியிலே ஈடுபடவேயில்லை. நீங்கள் அந்தக் கருத்துக்களைக் காலதாமதமாக ஏற்றுக்கொண்டு, இந்தக் கருத்துக்கள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இங்கு எடுத்துக் காட்டியதற்குத்தான் நான் நன்றி கூறிக்கொள்கின்றேன். அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்து பேசிய அந்தக் கருத்துக்களை மாத்திரம் எடுத்துச் சொன்னீர்கள். அவர்கள் ஆளுங் கட்சித் தரப்பிலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்தில் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள், அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த சமயத்தில் பேசிய பேச்சுக்களை எல்லாம் அண்ணா அவர்களுக்கு ஞாபகப் படுத்திய நேரத்திலே முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் அடுத்த விவாதத்திலே பொன்னப்ப நாடார் அவர்கள் படித்துப் பார்த்து, எங்களுக்கு எல்லாம் ஞாபகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அண்ணா அவர்கள் அப்பொழுது சொன்னார்கள். எதிர்க் கட்சியாக இருந்தபோது நாங்கள் சொன்ன விவகாரங்களை ஆளும் கட்சியாக அப்போதிருந்த காங்கிரஸ் கட்சி கவனித்தால்தானே எங்களுடைய கட்சியிலே அவைகளை எல்லாம் படிப்படியாக நிறைவேற்றுவோம். மெள்ள, மெள்ள ஆனால் உறுதியாக அவைகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். அந்தப் பணியைத்தான் நாங்கள் இன்றைக்குத் தொடர்ந்து செய்து வருகிறோம் என்ற கருத்தினை, முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு அண்ணா அவர்கள், இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கள், எதிர்க் கட்சியாக இருந்தபோது சொன்ன கருத்துக்கள், அவைகள் இந்த ஆட்சியிலே நிறைவேற்றப்படாமல் போய்விடும் என்று எண்ணிடத் தேவையில்லை என்பதை நான் இங்குக் குறிப்பிடுகின்றேன்.

காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுள் ஒருவரான நம்முடைய கே.டி.கே. தங்க மணி அவர்களும் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற நேரத்தில் அண்ணா அவர்களுடைய—எதிர்த் தரப்பிலிருந்தபோது வாதாடுவதற்காக எடுத்துக்கொண்ட ஒரு அழகான வாக்கியத்தை இருவருமே பயன்படுத்தினார்கள். எதிர்க் கட்சியாக இருப்பது, ஆளுங்கட்சிக்கு லாலி பாடுவதற்காக அல்ல. எதிர்ப்பான கருத்துக்களைத் தெரிவிப்பதற்காகத்தான் இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்கள் ஆளுங்கட்சி செய்கின்ற நல்ல காரியங்களை எல்லாம் பாராட்டுகின்ற அதே உணர்வோடு, தீய காரியங்களை எதிர்த்திட வேண்டும் என்கின்ற கருத்தினையும் கொண்டிருந்தார்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. எதிர்க் கட்சித் தரப்பிலே காங்கிரஸ் கட்சியானாலும் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும், கம்யூனிஸ்ட் கட்சியானாலும் அல்லது வேறு எந்தக் கட்சியானாலும் இங்கே பேசிய நேரத்தில் நாங்கள் லாலி பாடுவதற்காக இங்கே வரவில்லை என்று சொன்னபோது, நான் எண்ணிக்கொண்டேன், இந்த அரசை எதிர்த்து அல்லது இழித்து அல்லது பழித்துப் பேசிய நேரத்திலெல்லாம் நான் அதை லாலியாகக் கருதிக் கொள்ளாவிட்டாலும் நம்முடைய பழைய காலத்துக் கல்யாண வீடுகளிலே நடைபெறுகின்ற நலுங்குப் பாட்டாக அவைகளையெல்லாம் கருதிக்கொண்டேன். கல்யாண வீடுகளில்—மாப்பிள்ளை அழகாக இருப்பார். மணமகளும் அழகாக இருப்பாள் — ஆனால் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரைப் பழித்துப் பாடுகின்ற நேரத்தில் —



அழகான மாப்பிள்ளையைப் பழித்துப் பாடுவார்கள். அதைப் போலவே மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் அழகான பெண்ணைப் பழித்துப் பாடுவார்கள். 'இந்த அழுமூஞ்சி மாப்பிள்ளைதான் எங்கள் அழகான பெண்ணுக்குப் பொருத்தமா?' என்று பெண் வீட்டார் பாட, உடனே மாப்பிள்ளை வீட்டார் 'இந்தச் சுடுமூஞ்சிப் பெண்தான் எங்கள் சுந்தரனுக்குப் பொருத்தமோ?' என்று பாடுபவார்கள். இது நலுங்குப் பாட்டு. ஆகவே எதிர்த்துப் பேசிய கருத்துக்களில், அழகாக இருந்தாலும் நலுங்கு பாடுகின்ற நேரத்திலே மாப்பிள்ளையையோ, மணமகளையோ பாராட்ட வேண்டும் என்கின்ற எண்ணம் எப்படியிருந்தாலும், பாடியது நலுங்காயிற்றே என்பதற்காக, கேலி பேசுவதும் கிண்டல் பேசுவதும் நம்முடைய கல்யாண வீடுகளிலே நடைபெறுகின்ற வழக்கம் அந்த வகையிலே இது லாலியாக இல்லாவிட்டாலும் நலுங்காக அமைந்ததற்காக நான் நன்றி கூறிக்கொள்ளுகிறேன். அந்தக் காரணத்தினால், பாடப்பெற்ற பாட்டிலே உள்ளதற்கு ஏற்றதாகத்தான் இந்த அரசு இருக்கிறது என்று நான் நிச்சயமாக எடுத்துக் கொள்ள மாட்டேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த அளவில், தரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை பற்றி மொத்தமாக—பொதுவாக—சில கருத்துக்கள் இங்கே கூறப்பட்டன. அந்தக் கருத்துக்களைப் பொறுத்த வரையில் வரவு செலவுத் திட்டம் எந்த வகையிலே அமைகிறது என்றால் வளர்ச்சி வேகத்தைப் பெருக்குவதற்கும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்குமான இந்த முக்கியமான பிரச்சினைகளோடு தொடர்பு கொண்டதுதான் வரவு செலவுத் திட்ட அறிக்கைகளாகும்!


அப்படித் தொடர்பு கொண்டிருக்கிற அந்த நிலைமையை, விலைவாசிகளைக் குறைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்கின்ற இரண்டு தலைப்புக்களிலே பார்த்தோமேயானால், அது மாநில அரசு தயாரித்து வெளியிடுகின்ற வரவு செலவுத் திட்டத்திலே அதிகமான தொடர்பு கொண்டிருக்கிறதா அல்லது மத்திய அரசு தயாரித்து வெளியிடுகின்ற வரவு செலவுத் திட்டத்திலே அதிகமான தொடர்பு கொண்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது தேசிய மட்டத்திலே விலைவாசிகளைக் குறைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க—தேசிய மட்டத்தில் மத்திய அரசின் சார்பாக வெளியிடப்படுகின்ற வரவு

செலவுத் திட்டத்திலே நிச்சயமாக இருந்திட முடியாது என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டும். அந்தக் காரணத்தினாலே நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும், ஆளும் காங்கிரசைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும், ''இது பஞ்சாயத்து போர்டு ஆண்டறிக்கை போல் இருக்கிறது — ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆண்டறிக்கை போல் இருக்கிறது—ஒரு மாவட்ட ஆட்சி வளர்ச்சிக் குழுவினுடைய ஆண்டறிக்கை போல் இருக்கிறது, ஒரு கம்பெனியுடைய ஆண்டறிக்கை போல இருக்கிறது'' என்றெல்லாம் சொன்னார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை. இந்த அளவிற்காவது உண்மையை ஒத்துக்கொண்டு இன்றைக்கு மாநிலங்கள் பஞ்சாயத்து யூனியன் நிலைமையிலேதான் தம்முடைய வரவு செலவுத் திட்டத்தை வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை அவர்கள் ஒத்துக்கொண்டதற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பஞ்சாயத்து யூனியன் நிலைமையில் இல்லாமல் மாநில அரசுகள் உண்மையிலேயே மாநில அரசுகளாக இருந்து, மாநில அரசு சமர்ப்பிக்கின்ற வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கின்ற அளவிற்கு நிச்சயமாக இன்றைக்கு வளர வேண்டும்—அத்தகைய சக்தியைப் பெற வேண்டும்—வன்மையைப் பெற வேண்டும் என்பதை அவர்கள் சூசகமாக எடுத்துரைத்ததற்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாநில அளவிலே வைக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டங்கள், அந்த மாநிலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மாநிலத்தினுடைய நிதி வசதி ஆதாரங்கள் இந்த அடிப்படையிலேதான் அமைய முடியும். ஒரு விவாதம் இங்கே எழுப்பப்பட்டது. பற்றுக்குறை பட்ஜெட் நல்லதா, அல்லது உபரி பட்ஜெட் நல்லதா என்கின்ற ஒரு விவாதம்! பற்றுக்குறை பட்ஜெட் தீமையானது என்று, 19-ஆம் நூற்றாண்டிலே ஆரம்பித்து இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் வரையில்—அதாவது 1930 என்று நாம் கோடிட்டுக் கொள்ளலாம்—அதுவரையில் பற்றுக்குறை பட்ஜெட் தயாரிப்பது என்பது ஆபத்தானது—அது விலைவாசிகளை உயர்த்தும், என்றெல்லாம் ஒரு கருத்துக் கூறப்பட்டது. அதற்குப் பிறகு 'பற்றுக்குறை பட்ஜெட் நல்லது' என்பது மாத்திரமல்ல, உபரி பட்ஜெட்டுகள் அவ்வளவு சிலாக்கியமானவை அல்ல என்ற மாற்றுக் கருத்தும் தெரிவிக்கப்பட்டது. நாம், உபரி பட்ஜெட் நல்லதா, அல்லது பற்றுக்குறை பட்ஜெட் நல்லதா, என்கின்ற விவாதத்திலே நேரத்தைச் செலவிடாமல் எந்தச் சூழ்நிலையில்

பட்ஜெட்டுகள் தயாரிக்கப்படுகின்றன, அந்த பட்ஜெட்டிலே வருகின்ற பற்றுக்குறையின் அளவு, இடைவெளி (Gap) எந்த அளவுக்கு இருக்கிறது, அந்த இடைவெளியை நிறைவு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப்படுகின்ற முயற்சி என்ன, அந்த முயற்சியின் காரணமாக அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறுர்கள் என்ற இந்தச் சூழ்நிலைகளின் அடிப்படையிலேதான் ஒரு நிதிநிலை அறிக்கையை நாம் ஆராய்ந்திட வேண்டும்.


இன்றைக்கு மாநில அரசு பற்றுக்குறை பட்ஜெட் தயாரிக்கின்ற நேரத்தில், அதை ஈடுகட்டுவதற்காகச் சில வரிகளைப் போட வேண்டியிருக்கிறது. ஆனுல் மத்திய அரசு பற்றுக்குறை பட்ஜெட்டைத் தயாரித்து வெளியிடுகின்ற நேரத்தில் வரிபோடுவதோடு அல்லாமல் அதை ஈடுகட்டுவதற்காகப் பணப்புழக்கத்தையும் தாராளமாக அனுமதிக்கிறது. மத்திய அரசுக்கு பணப்புழக்கத்தைத் தாராளமாக அதிகரிக்கின்ற அந்த அதிகாரம் இருக்கின்றது. மாநில அரசுக்கு அந்த அதிகாரம் கிடையாது. அந்தச் சூழ்நிலையும் இல்லை. ஆகவே, பணப்புழக்கத்தைத் தாராளமாக அனுமதிக்கின்ற மத்திய அரசினுடைய பட்ஜெட்டின் காரணமாகத்தான், விலைவாசிகள் உயர்கின்றன—வேலையில்லாத் திண்டாட்டம் எழுகின்றது என்கிற உண்மையை நாம் உணர வேண்டுமேயல்லாமல் பற்றுக்குறையை ஈடு கட்டுவதற்காக ஒரு சில வரிகளைப் போடுகின்ற மாநில அரசினுடைய நிதிநிலை அறிக்கையால் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்று கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாக ஆகாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.




இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் வரிப் போடுவ தில் தாங்கக் கூடியவர்களுக்கு வரி, தாங்கமுடியாதவர்களுக்குப் புதிதாக வரி போடக் கூடாது என்கின்ற கொள்கை, போடுகின்ற வரிகளின் மூலம் விலைவாசியோ அல்லது மற்றக் காரியங்களோ உயர்ந்து விடாமல் அதை ஒரு கட்டுக்கோப்புக்குள்ளே அடக்கி வைக்க வேண்டும் என்கின்ற அந்த இலட்சியம்—இந்த அடிப்படை யில்தான் நாம் வரி போடும் கொள்கையைக் கடைப்பிடித்து வரு கின்றோம். அந்த நிலையில் 10 கோடி ரூபாய்க்கு இந்தப் பற்றாக் குறையை ஈடுசெய்வதற்காக நாம் வரி போட்டிருக்கிறோம் என்றால் மோட்டார் வரிச் சீர்திருத்தத்தின் வழியாக 6.5 கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல ஆண்டுக் காலமாக வியாபாரிகள் பல முனை விற்பனை வரி தருவதை ஒரு முனை விற்பனை வரி என்று மாற்றிட வேண்டும் என்று செய்து வந்த கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் 59 பொருள்களுக்கான பலமுனை வரியை ஒருமுனை வரியாக ஆக்கியதன் காரணமாகவும், அந்தச் சீரமைப்பிலே வருகின்ற வருவாயும், அதையொட்டி 50,000 ரூபாய் வரையிலும் வியாபாரம் செய்கின்றவர்களுக்குச் சலுகை கொடுத்து, 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கின்ற வர்களுக்குச் சர்-சார்ஜ் 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் என்று, தாங்கக்கூடியவர்களுக்கு அதை உயர்த்தியதன் காரணமாக வும் 3.5 கோடி ரூபாயும் ஆக மொத்தம் இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட 10 கோடி ரூபாய் நாம் இன்றைக்கு வரி விதித்திருக்கி றோம். வரி விதித்திருக்கிறோம் என்று சொல்வது கூடச் சரியல்ல, வரி விதிப்பில் மாற்றம் செய்திருக்கின்றோம்.

நாட்டிலே அத்தியாவசியப் பொருட்களின் அகவிலைப் படியை நிர்ணயிப்பதற்கு என்றே சில பொருள்கள் இருக்கின்றன. அக விலைப்படியை எந்தப் பொருள்களைக் கொண்டு நிர்ணயிக்கிறார் கள் என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும். அந்தப் பட்டியலில் உள்ளவற்றை நான் உங்களிடத்திலே சொல்ல விரும்பு கிறேன். அரிசி, கோதுமை, சர்க்கரை, கேப்பை, பச்சைப் பயறு, என்று ஆரம்பித்து, பூண்டு வெந்தயம் என்றெல்லாம் தொடர்ந்து நல்லெண்ணெய், கடலை எண்ணெய், முட்டை, பால், தயிர், நெய் என்றெல்லாம் நீண்டு, பொடி, ஜிலேபி, விறகு, மண்ணெண் ணெய், மின்விசைக் கட்டணம் என்றெல்லாம் தொடர்ந்து, தலை யணை உறை, செருப்பு, குடை, பெட்டி என்றெல்லாம் மீண்டும் நீண்டு முகப் பவுடர், பற்பொடி, தையற் கூலி என்கின்ற வகையில் இப்படி 100 பொருள்கள்—இந்த 100 பொருள்களும்தான் அத்தி யாவசியப் பொருள்கள்! எதற்கு அத்தியாவசியப் பொருள்கள்?

பொருள்களின் மீது இன்றைக்கு வரிமாற்றம் செய்திருக்கின்றோமே! அது பாதிக்கிறதா என்றால், இல்லை. நாம் வரி மாற்றம் செய்துள்ள பொருள்கள் என்கின்ற பட்டியல் இந்த மாமன்றத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. அவைகளிலே இரண்டு மூன்று கட்டங்களில் 7 சதவிகித வரியாக இருந்த பொருள்கள், அப்படியே 7 சதவிகித மாக, ஒருமுனை வரியாக, நிர்வாக வசதிக்காக, பல தொந்தரவு களை நீக்கிக்கொள்வதற்காக மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு போன்றவைகளுக்கு 7 சதவிகிதம் என்று இருந்ததை 3.5 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டிருக்கின்றது. எதற்கு அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த 59 பொருட்களில் ஒருமுனை வரியாக 4 பொருட்கள், சீட்டுக் கட்டுகளுக்கு 9 சதவிகிதம், செயற்கை இரப்பர் பொருள்கள் 9 சதவிகிதம், இரப்பரால் செய்யப்பட்ட வேறு பொருள்கள் 9 சதவிகிதம், பட்டுத் துணிகள்—தூய பட்டுத் துணிகள்(கைத்தறி நீங்கலாக) 10 சதவிகிதம், எஃகினால் செய்யப்பட்ட மேஜை, நாற்காலிகள் போன்ற தளவாடங்கள் 10 சதவிகிதம், லினோலியம் 15 சதவிகிதம், சலவைக் கற்களும், சலவைக் கற்களினால் ஆக்கப் பட்ட பொருள்கள் 15 சதவிகிதம், நீளமான தரை விரிப்புகளுக்கு 15 சதவிகிதம், மண் மற்றும் வழுவழுப்பான ஓடுகள் (மொசாயிக் ஓடுகள்) 15 சதவிகிதம், விசை ஏணி (லிப்ஃட்)க்கு 15 சதவிகிதம், மொலாசஸ் 25 சதவிகிதம், அரிஷ்டம் 30 சதவிகிதம், இண்டியன் மேட் ஃபாரின் லிக்கருக்கு 25 சதவிகிதம் என்கின்ற அளவிற்கு- இந்த ஆடம்பரப் பொருள்களுக்குத்தான் நாம் இந்த வரி மாற்றத் தின் மூலம் வரி உயர்வு செய்திருக்கிறோமே அல்லாமல், மற்றப்






பொருள்களுக்கு நாம் கூடுதலான வரையில் வரியைக் குறைத்திருக்கிறோம். ஏற்கெனவே பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றும் நேரத்தில் அதிகப்படுத்தாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, வரி உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள்—வரி உயர்வை 10 கோடி ரூபாய்க்கு போட்டுவிட்டோம் என்று சொன்னால், பொருத்தமுடையது அல்ல என்பதற்காக இவைகளை நான் சொன்னேன்.

ஏதோ, தமிழகத்திலே மட்டும்தான், இந்த மாநிலத்திலே மட்டும்தான் வரிகளைப் போட்டுவிட்டோம் என்று வாதிடுவது சரியான கருத்து அல்ல. மற்ற மாநிலங்களிலே போடப்பட்டிருக்கின்ற வரவு செலவுத் திட்டங்களை, எனக்குக் கிடைத்த வரையிலே அந்தத் தகவலை உங்களுக்குச் சொல்ல நான் விரும்புகின்றேன்.

மராட்டிய மாநிலத்தில் வருவாய் 693 கோடி ரூபாயும், செலவு 728 கோடி ரூபாயும் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டுப் பற்றுக்குறை 35 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, வரி 31 கோடி ரூபாய்க்கு மராட்டிய மாநிலத்தில் போடப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்கத்தின் வருவாய்க் கணக்கில், வருவாய் 435 கோடிக்குக் காட்டப்பட்டு, செலவு 455 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, பற்றுக்குறை 19 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, வரி

24 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில், வருவாய்க் கணக்கில் வருவாய் 367 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டு, செலவு 362 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, உபரி 4 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, 19 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தில் வரவு செலவு விவரங்கள் இல்லாவிட்டாலும் பற்றுக்குறை 21 கோடி ரூபாய் என்றும், வரி விதிப்பு 17 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கிறது என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த் நிலையில், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், 470 கோடி ரூபாய் வருவாயும், 483 கோடி ரூபாய் செலவும் உள்ள நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை 12.56 கோடி என்பதும், நாம் போட்டிருக்கின்ற வரி 10 கோடி ரூபாய் என்பதும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் அதிகம் இல்லை என்பதையும் நான் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தமிழ் நாட்டு மக்களுக்கு உணர்த்துவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு வேளை . . .

திரு. கே.டி .கே. தங்கமணி : இந்த லிஸ்டில் கொடுத்திருக்கும் 59 பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் கேட்கிறேன். . ஆயில் கேக்குக்கு வரி போடவில்லை என்ற முறையில் பிரசங்கம் இருந்தது. ஆனால் இதற்கு 3.5 சதமானம் வரி இருப்பதையும், ஏரியேடட் வாட்டர்சுக்கு 5 சதமானம் வரி இருப்பதையும் பார்க்கிறோம். இவை எல்லாம் சாதாரண மக்கள் உபயோகப் படுத்தக்கூடிய பொருள்கள் அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாட்டுத் தீவனத்திற்கு விதி விலக்கு என்று சொன்னோம். ஏற்கெனவே, எண்ணெய்களுக்கு விதி விலக்கு தற்காலிகமாகச் செய்திருக்கிறோம். இப்போதும் அமலில் இருக்கிறது. ஆனால் அந்த விதிவிலக்குச் செய்ததன் காரணமாக விலை குறைந்ததா என்றால், இல்லை. அதையும் நாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த விதிவிலக்கைப் பெரிய வியாபாரிகள் அனுபவிக்கிறார்களே யல்லாமல் வாங்கி நுகர்வோர் யாரும் (கன்ஸ்யூமர்ஸ்) பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படவில்லை. அதையும் மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அதிலும் பிண்ணாக்கைப் பொறுத்தவரை 3.5 சதவிகிதமாக ஆக்கி யிருக்கிறோம். அதைப் போல் எண்ணெய்க்கு 3.5 சதவிகிதம்

ஆக்கியிருக்கிறோம். இல்லாவிட்டால் பலமுனை வரியில் 7 சதவிகித மாக நாம் ஆக்கியிருக்க வேண்டும்.

திருமதி த.ந. அனந்தநாயகி : மாட்டுத் தீவனத்திற்கு. தீவனம் என்றால் பிண்ணாக்கும்தானே அதில் சேருகிறது. மாட்டுத் தீவனத் துக்கு விலக்குக் கொடுத்துவிட்டு பிண்ணாக்குக்கு வரி போட்டால் அது எப்படி மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு என்று சொல்ல முடியும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புண்ணாக்கு மாட்டுத் தீவனமாக மாத்திரமல்லாமல் வேறு பல காரியங்களுக்கும் பயன் படுத்தப்படுகிறது. ஆகவேதான் மாட்டுத் தீவனத்தில் பிண்ணாக்கு இல்லாமல் என்று போட்டிருக்கிறோம். அதை 3.5 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். நான் முதலில் சொன்னதை மறந்து விடக் கூடாது. இப்படிக் குறைக்கின்ற காரணத்தால் பொது மக்களுக்குப் பயன்படுகிறதா என்றால் அது பயன்படவில்லை. அதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆக்க வேலைக்கான ஒதுக்கீடுகளை நாம் குறைத்து விடுவோ மானால் பற்றாக்குறை பட்ஜட்டைப் போடாமலே வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க முடியும். ஆனால், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கருதுகிற ஓர் அரசு, எப்படியும் நல்ல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற முனைப்போடு பற்றாக்குறையாக இருந்தாலும் பரவாயில்லை. தாங் கக் கூடியவர்களிடத்திலே வரி போட்டு அல்லது வருமானத்திற் கான வேறு வழிவகைகளை யோசித்து, சிந்தித்து, செயல்படுத்தி அதன் மூலமாகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணுவது தவறு அல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்பு கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் கள் பலரும் ''இது மத்திய அரசைக் குறை கூறுகின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது'' என்று குறை கூறினார்கள். நல்ல வேளையாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் 'மத்திய அரசு நமக்குத் தரவேண் டிய பங்கை ஒழுங்காகத் தந்துதான் தீர வேண்டும்; நிதி விவகாரங் களில் அநீதி இழைக்கப்படக் கூடாது; அப்படி இழைக்கப்படுமா னால் அதைத் தட்டிக் கேட்க, வலியுறுத்திக் கேட்க, மாநில அரசுக்கு உரிமை இருக்கிறது; மாநில அரசு தட்டிக் கேட்க வேண் டும்; இல்லையேல் தமிழ்ச் சமுதாயம் பாழ்பட்டு விடும்' என் றெல்லாம் அவர் கூறிய அந்த வாசகங்கள் இந்த அரசுக்குத் தெம்

பூட்டுகிற வகையில் அமைந்திருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

மத்திய சர்க்காரைக் குறை கூறுகிறோம் என்றால், ஏதோ பாராளுமன்றத்தில் நின்றுகொண்டு பேசுகிற ஒரு உறுப்பினரைப் போல் மத்திய அரசினுடைய அரசியல் கொள்கைகளில் வேறுபட்டு விமர்சிக்கிற கோணத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே அந்தக் குறைபாடு அமையவில்லை என்பதைத் தயவுசெய்து இந்த மன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

நிர்வாகத்திலே இருக்கும் சிக்கல், பல்வேறு அதிகாரங்கள் இல்லாத காரணத்தால் ஏற்படுகிற திணறல், திக்குமுக்காடல், நிதி ஒதுக்கீட்டில் ஒழுங்கான பங்குத் தொகை அளிக்கப் பெறாத காரணத்தால் ஏற்படுகின்ற சங்கடம் இவைகளைத்தான், நிர்வாகத்தில் ஏற்படுகிற இன்னல்களைத்தான் அந்தக் கோணத்திலேதான் நிதிநிலை அறிக்கை முழுவதிலும் நாம் இங்கே வாசித்திருக்கிறோமே அல்லாமல் மத்திய சர்க்காரைக் குறை கூற வேண்டும் என்கின்ற எண்ணம் கிஞ்சித்தும் கிடையாது என்பதை நான் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.


ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய முதலாண்டுத் திட்டம் வருகிற ஏப்ரல் திங்களில் தொடங்கியாக வேண்டும். ஆனால், பத்திரிகையிலே என்ன செய்தி படிக்கிறோம்? இன்னும் திட்டத்திற்கான திட்டவட்டமான செய்தி தெரிவிக்கப்படவில்லை —திட்டத்தைப் பற்றித் திட்டவட்டமான கொள்கை மத்தியிலே இருப்பவர்களுக்கு இல்லை என்கின்ற செய்தியைத்தான் படிக்கிறோம். இன்னும் மூன்று மாதக் காலங்களில் அல்லது ஆறு மாதக் காலங்களில் இந்தத் திட்டகாலத் திட்ட அளவைப் பற்றி முடிவு எடுப்பதற்கு ஆகலாம் என்கின்ற செய்திகளைப் படிக்கும்போது நாம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு முடியாத சூழ்நிலையில் இருக்கிறோமா இல்லையா என்பதை ஒரு கேள்வித் தோரணையிலே கேட்பது மத்திய சர்க்காரைக் குறை கூறுகின்ற காரியமாக ஆகிவிட முடியாது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 25,000 கோடி ரூபாய் அனைத்து இந்திய அளவிலே திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டது என்றால் இப்போது இரண்டு மடங்குக்கு மேலாக 50,000 கோடி ரூபாய் அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே திட்டத் தொகையாக ஒதுக்குகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடப்பு ஆண்டினுடைய ஆண்டுத் திட்டத்திற்கு நம்

முடைய மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை—ஒதுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட தொகை 129 கோடியாக இருக்கும்போது அதாவது 25,000 ரூபாய் கோடித் திட்டத்தில் நடப்பு ஆண்டு 129 கோடி ரூபாய் என்று இருக்கின்றபோது 50,000 கோடி ரூபாய்த் திட்டத்தில் அடுத்து வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருகிற ஆண்டினுடைய—முதல் ஆண்டினுடைய திட்டம் 118 கோடி ரூபாய்த் திட்டம்—அல்லது 108 ஆக இருக்கட்டும் இது நியாயமா என்று கேட்பது எப்படி மத்திய சர்க்காரைக் குறை கூறுவதாக ஆகிவிட முடியும், என்பதையும் அருள்கூர்ந்து மாண்பு மிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடனில் தவணை முறையில் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்களே—87 கோடி ரூபாய் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கொடுத்திருக்கிறார்களே என்றெல்லாம் சொல்லப்பட்டது. தவணை முறைகளில் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், அதிலும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு இருக்கிறது. சில நேரங்களில் வேறு ஒரு மாநிலத்தைவிட அதிகமாகவும் நாம் அதிலே சலுகை பெறுகிறோம். சில நேரத்திலே ஒப்பிட்டுப் பார்த்தால் வேறு சில மாநிலத்தை விடக் குறைவாக நாம் சலுகை பெறுகின்றோம். அந்தச் சலுகை பற்றி ஹண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அதற்காகக் குறிப்பிடுகிறேன். இந்த 87 கோடி ரூபாய் கடன் தவணை முறையிலே தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்ற அந்தக் காரணத்தை எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே அந்த 87 கோடி ரூபாயை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தவணையாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தருவதாகச் சொல்லப்படுகிற—தருவதாக என்று சொல்வதைக்கூடத் திருத்திக் கொள்ள வேண்டுகிறேன்—அதற்கு ஒப்புதல் தருவதாகச் சொல்லப்படுகிற 118 கோடி ரூபாய்க்குள்ளே தான் அந்தக் கடன் தவணையும் இணைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், நடப்பு ஆண்டில் நாம் திட்டத்திற்காகச் செலவிடுகிற 129 கோடி ரூபாய் எங்கே? ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டிலே நாம் செலவழிக்கலாம் என்று நமக்கு ஒப்பளிக்கப்படுகிற—அதாவது சொல்லிக் கொண்டிருக்கிற கடன் தவணை உள்ளிட்ட 118 கோடி ரூபாய் எங்கே? என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்திலேதான் மத்திய அரசு, அல்லது திட்டக் குழு அல்லது நிதிக் குழு இவைகள் நம்முடைய மாநிலத்திற்கு அநீதி வழங்குகிற சூழ்நிலை தென்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது அரசுப் பொறுப்பிலே இருக்கிற எங்களுடைய கடமையாக இருக்கிறதேயல்லாமல் வேறு அல்ல.

திட்டக் குழு என்ன செய்திருக்கிறார்கள்? நிதிக் குழுவில் என்ன செய்திருக்கிறார்கள்? ஒரு புதிய தலைப்பு. என்ன தலைப்பு? ''நிர்வாகத்தைச் சீரமைத்து மேம்படுத்தும் மானியம்''— Up-Graduation Grants அந்த மானியம் அந்தத் தலைப்பில் சில மாநிலங்களுக்கு உதவித் தொகை, சிறப்புத் தொகையாக அளிக்கிறார்கள். அதைப் பெற முடியாத மாநிலங்கள் எவையெவை? தமிழ் நாடு, குஜராத், கேரளம், மராட்டியம் ஆகிய இந்த நான்கு மாநிலங்களும் அந்த மானியத் தொகையைப் பெற முடியவில்லை.





ஆனால் நிர்வாக மேம்பாட்டுக்காக, எந்தக் காரணத்தைக் காட்டுகிறார்கள்? கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளில் இது வரையிலே அதிகம் செலவு செய்யாமல் இருக்கிற மாநிலங்களுக்கு ''Up-Graduation Grants'' என்று தருகிறார்கள். அப்படித் தருகின்ற அந்த மானியம், உத்திரப் பிரதேசத்திற்கு 290 கோடி ரூபாய்; பீகாருக்கு 166 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்திற்கு 72 கோடி ரூபாய்; ஒரிஸ்ஸாவுக்கு 57 கோடி ரூபாய்; ஆந்திரத்திற்கு 52 கோடி ரூபாய்; மத்தியப் பிரதேசத்திற்கு 50 கோடி ரூபாய்; மைசூருக்கு 27 கோடி ரூபாய்.

தமிழகம், குஜராத், கேரளம், மராட்டியம் போன்ற மாநிலங்கள் கல்வி, மக்கள் வாழ்வு போன்ற துறைகளில் அதிகம் செலவு செய்திருக்கின்றன என்ற காரணம் காட்டி இந்த மானியம் தர மறுக்கப்பட்டிருக்கிறது.

அந்த மானியம் நமக்கு வேண்டுமென்று போராடுகிற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களுடைய உறுதுணை ஆளுங்கட்சிக்கு இருந்திட வேண்டும் என்று கேட்பது மத்திய அரசுக்கு விரோதமான போக்கு அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான்-பிளான் எக்ஸ்பென்டிச்சர் அதிகமாக ஆகிக்கொண்டு போகிறது. ஆகவே எல்லா அரசாங்கங்களும் என்று அவர்கள் ஆங்கிலத்தில் கூடச் சொன்னார்கள். They must reduce the non-plan Expenditure என்று அன்றைக்கு அழுத்தந்திருத்தமாக அவர்கள் சொன்னார்கள். நான்-பிளான் எக்ஸ்பென்டிச்சர் என்பது என்ன? ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டத்திற்கென்று செலவிடப்படுவது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டமில்லாத செலவு ஆகிறது. அதுதான் நான்-பிளான் எக்ஸ்பென்டிச்சர். இப்போது ஐந்தாண்டுத் திட்ட ஆண்டில் ஆரம்ப ஆண்டில் ஆயிரம் ஆசிரியர்களை நீக்கியிருப்பதாக வைத்துக் கொள்வோம். அடுத்த 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் அது நான்-பிளான் எக்ஸ்பென்டிச்சரில் வந்துவிடும். அதைக் குறைக்க வேண்டும் என்கின்ற அம்மையாரின் வாதத்தை ஒப்புக் கொண்டால் அந்த ஆயிரம் ஆசிரியர்களை, ''திட்டமில்லாத செலவை நாங்கள் குறைக்கப் போகிறோம்; நீங்கள் வீட்டுக்குப் போங்கள்'' என்று சொல்ல வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விடும். அதேபோல் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் ஒரு நூறு மருத்துவ மனைகளைக் கட்டுவதாகத் திட்டம். இந்தத் திட்டம் போட்டு பிறகு அந்த ஐந்தாண்டுகள் முடிந்து அடுத்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்பத்தில் அந்த மருத்துவ மனைகள் எல்லாம் நான்-பிளான்... எக்ஸ்பென்டிச்சரில் வந்து விடுகிறது. திட்டமில்லாத செலவில் வந்து விடுகிறது. அப்படி வரும்போது, திட்டமில்லாத செலவைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அந்த மருத்துவ மனைகளை இழுத்து மூடிவிடவும் முடியாது. அந்தச் செலவுகளை, பராமரிப்புகளைக் குறைத்து விடவும் இயலாது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : ஒரு ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கும்போது அப்போது நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சர் ஏற்பட்டால் அதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் உங்கள் நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சர் மேலே போய்க்கொண்டிருக்கிறது. 68—69, 69—70, 70—71 அதனாலே எந்த வருட ஐந்தாண்டுத் திட்டம் முடிந்ததும், எந்த வருட புதிய ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியது என்றும் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரே ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டுக் கதையை முடித்து விட்டால் பரவாயில்லை. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும், மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடர்ந்து துரத்திக் கொண்டே இருக்கிறது. அப்படிச் சக்கரம் போல் போய்வரும் நிலைமையில் ஒரு முறை திட்டச் செலவாக இருந்தது, அடுத்த முறை திட்டம் இல்லாத செலவாக ஆகிவிடுகின்றது. ஆகவே இதைக் குறைக்க முடியாது. அம்மையார் அவர்கள் 'நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சர்' என்ப




தற்குப் பதிலாக 'நான்-டெவலப்பெண்ட் எக்ஸ்பென்டிச்சர்' என்று கூறியிருப்பார்களேயானால் அதை விவாதிப்பதிலே அர்த்தமுண்டு. ஆகவே நான்-ப்ளான் எக்ஸ்பென்டிச்சர் என்பது குறைப்பதற்கு ஏதுவான ஒன்று அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன். நம்முடைய நண்பர், கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் பேசிய திரு. வடிவேல் அவர்கள் பேசுகிறபோது நிலச் சீர்திருத்தத்தால் எடுத்த நிலங்கள் எல்லாம் எங்கே என்று கேட்டார்கள். அல்லது எவ்வளவு நிலம் எடுத்தீர்கள்? எவ்வளவு நிலம் எடுத்தது, எத்தனை ஏக்கர் எடுத்தது என்றெல்லாம் கேட்டார்கள். ஆகவே, பெயருக்கு ஏற்றாற்போல் ஆக்ரோஷமாகவே பேசினார்கள். அவருடைய உருக்கமாகவும், உணர்ச்சி வசமாகவும் இருந்த அந்தப் பேச்சில் நிலங்கள் எல்லாம் எங்கே, எங்கே என்று கேட்டபோது

எனக்குக் கூடச் சந்தேகமாக இருந்தது. எங்கேதான் போய்விட்டது. நமக்குத் தெரியாமல் போனதை திரு. வடிவேல் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களோ என்னவோ என்று கூடச் சந்தேகப்பட்டேன். பிறகு புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்தில், நிலச் சீர்திருத்தத்தால் 1967-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டவை, அதாவது ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்து 30 ஸ்டாண்டார்ட் ஏக்கர் என்று கொண்டு வந்தபோது, முன் கூட்டியே அறிவிக்கப்பட்டு, கிடைத்தது கூட அல்ல 24,194 ஏக்கர்தான் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டது. அப்போது எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது நான் கேட்டேன். அப்போது ரெவின்யூ அமைச்சராக இருந்த திரு. மாணிக்கவேலர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். திரு. வடிவேல் அவர்கள் கேட்ட இதே கேள்வியைக் கேட்டேன். எவ்வளவு நிலம் எடுத்தீர்கள், எங்கே இருக்கிறது என்றெல்லாம் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், அவைகள் எல்லாம் பிரிக்கப்பட்டு விட்டன என்று. ''இப்படி ஆளாளுக்கும் பிரித்துக்கொண்டு போய்விட்டார்களே! உபரி நிலம் எங்கே?'' என்று கேட்ட பொழுது திரு. மாணிக்கவேலர் அவர்கள் நகைச்சுவையாகவே சொன்னார்கள். நிலத்தைப் பிரிக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை, ஆகவே பிரித்துக் கொண்டார்கள். இதற்காகக் கவலைப்படக் கூடாது என்று திரு. மாணிக்கவேலர் அவர்கள் நகைச்சுவையாகச் சொல்லி எங்கள் வாயையெல்லாம் அன்று அடைத்துவிட்டார்கள். இதிலே 1967 மார்ச் மாத அளவிலே அப்போது அறிவிக்கப்பட்ட உபரி நிலம் 24,194 ஏக்கர். இதிலே எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,350 ஏக்கர். உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,330 ஏக்கர். 1967 வரையில் இதில் விவசாயிகளுக்கு யாதொரு நிலமும் கொடுக்கப்படவில்லை. அதைக் கோடிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு 1970-ஆம் ஆண்டு இந்த ஆட்சியில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று குறைத்தோம். அப்படிக் குறைத்தபோதுதான் கரும்பு நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. மேய்ச்சல் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு இவைகள் எல்லாம் ரத்து செய்யப்பட்டன. ஆக, இந்தச் சட்டத்திற்குப் பிறகு 31—1—1974 வரையில் அறிவிக்கப்பட்ட உபரி நிலம் 90,284 ஏக்கர். இவற்றில் வழக்குகள் ஏற்பட்டு விட்ட காரணத்தால் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிற நிலங்கள் 20,429 ஏக்கர். நோட்டீஸ் கொடுக்கப்பட்டு எடுக்கும்

தருவூரயில் உள்ள நிலங்கள் 2,306 ஏக்கர். எடுத்துக் கொள்ளப் பட்ட நிலங்கள் 67,519 ஏக்கர். எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தில் குத்தகைக்காரர்களுக்கும் மற்றும் நிலமற்ற விவசாயி களுக்கும் அளித்தவை 62,387 ஏக்கர். இதிலே பட்டா கொடுக்கப் பட்டு முழுமையாக அவர்களுக்கு உரிமையாக்கப்பட்டது 39,970 ஏக்கர். தொடர்ந்து பட்டாக்கள் மேலும் கொடுக்கப்பட்டு வரு கின்றன. ஆகவே, நிலம் எங்கே எங்கே என்று தேடவேண்டிய அவசியமில்லை. இன்னும் அதிகமாகக் கூட 90,000 ஏக்கருக்கு மேல்கூட நிலம் கிடைத்திருக்கக் கூடும். ஆனால் முப்பது ஸ்டாண் டர்ட ஏக்கர் வரப்போகிறது என்று முன் கூட்டியே அறிவிக்கப் பட்ட காரணத்தால் ஆளுக்கு ஆள் அன்று திரு. மாணிக்கவேலர் அவர்கள் சொன்னதைப் போல் பிரித்துக் கொண்டுவிட்ட காரணத் தால் நாம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கொண்டு வந்த நேரத்தில் அதிக உபரி நிலம் நமக்குக் கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நண்பர் வடிவேல் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். 64 இலட்சம் பேர்கள் சொந்த நிலமற்றவர்கள் என்று சர்க்கார் கணக்குக் கூறுவதாகச் சொன்னார்கள். அப்படி எந்தச் சர்க்கார் கணக்கும் இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் அவர்கள் தனியாகவோ அல்லது மன் றத்தில் வேறு ஒரு நேரத்திலோ வெளியிடுவார்களேயானால் அவை களை ஆராய்ந்து அது பற்றிப் பரிசீலிக்க நான் தயாராயிருக்கிறேன். சர்க்கார் இப்போது எனக்குக் கொடுத்துள்ள தகவல்படி, 71 மக்கள் தொகையின் கணக்குப்படி தமிழ் நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 இலட்சம். அதில் விவசாயத் தொழிலாளர் சில நேரங்களில் விவசாய வேலையைப் பார்ப்பார் கள். மற்ற நேரங்களில் வேறு வேலை செய்யும் விவசாயத் தொழி லாளர்கள் உட்பட எல்லோரையும் உள்ளிட்டு விவசாயத் தொழி லாளர்களின் எண்ணிக்கை 45 இலட்சம். இதில் குத்தகைதாரர் களின் எண்ணிக்கை 4 இலட்சம். இந்தக் கணக்கைத் தவிர நிலமற்றவர்கள் 64 இலட்சம் என்பதற்குத் தகவல் எதுவும் என்னி டத்தில் இல்லை. ஆகவே அவர்கள் தெரிவிப்பார்களானால் அது பற்றிப் பரிசீலிக்க நான் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன். நிலச் சீர்திருத்தத்தால் எடுக்கப்படுகிற எந்த நிலமானாலும் அதை முதல் கட்டமாக அந்த நிலத்தை யார் குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அப்படிக் குத்தகைதாரர்கள் யாரும் இல்லா விட்டால் நிலமற்ற விவசாயிகளுக்கு அது வழங்கப்படுகிறது என்ப தையும் நண்பர் வடிவேல் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதிலாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. குமாரசாமி அவர்கள் பேசும்போது, ''இந்த அரசு நீர்ப் பாசனத்திற்காக என்ன திட்டங்களைத் தீட்டியது? என்ன காரியங்களைச் செய்திருக்கிறது?'' என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் ஏற்கெனவே இருந்து இடையில் தேங்கிவிட்டு நின்றதைப் புதுப்பித்து 68,000 ஏக்கர் பாசன வசதி பெறுகிற நிலைமை இருந்ததை 1,42,000 ஏக்கர் என்று அதிகப்படுத்தி யிருப்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் முழு




சக்தியையும் உபயோகித்து 47,000 ஏக்கர் இப்போது பயிர் செய்யப்படுகிற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்பட்ட நீர்ப் பாசனத் திட்டங்கள் : தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மணிமுத்தா நதி, நெல்லை மாவட்டத்தில் இராம நதித் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கடனாறு திட்டம். மதுரை, இராமநாதபுரத்தில் வைகைக் கால்வாய் புதுப்பித்தல் திட்டம், மதுரையில் பரப்பலார், மதுரையில் பாலார், பொரந்தலார், தருமபுரியில் சின்னாறு திட்டம், வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் தண்டரை அணைக்கட்டுத் திட்டம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காட்டில் நந்நன் கால்வாய் புதுப்பிக்கப்படும் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதி திட்டம், திருச்சியில் பொன்னையாறு

திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் பிளாக்கால் திட்டம், மதுரையில் மருதா நதித் திட்டம், மொத்தம் 27 கோடியே 7 இலட்சம் ரூபாய்க்குத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் காரணமாக 1,87,530 ஏக்கர் புதிதாகச் சாகுபடிக்கு வருகின்ற சூழ்நிலையை இந்த அரசு இந்த ஐந்தாருண்டுக் காலத்தில் செய்து முடித்திருக்கிறது. இன்னும் 73—74-ல் அனுமதியளிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டிருக் கின்றன. அவைகளை எல்லாம் உறுப்பினர்கள் படித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன். சிறு பாசனத் திட்டத்தில் முதலாக பாசனம் செய்யப்பட்ட கணக்கைப் பார்த் தால் நீங்கள் எல்லாம் வியப்படைகிற கணக்கை இந்த அரசு உருவாக்கிக் காட்டியிருக்கிறது, ஐந்தாறு ஆண்டுக் காலத்தில். 65—66 முடிய—பல ஆண்டுகள் தொடர்ச்சியாக—66-ஆம் ஆண்டு முடிய, தனியார் குழாய்க் கிணறுகள் 4,369 இருந்தது. இன் றைக்கு 14,477 கிணறுகள். 66-முடிய துளைக் குழாய்கள் 2,248 இருந்தது. இன்றைக்கு 14,737 இருக்கிறது. அன்றைக்கு 66 முடிய, 67-ல் 565 துளைக் குழாய்கள் (போர் வெல்ஸ்) இருந்தன. இன்றைக்கு 4,873 துளைக் குழாய்கள் இருக்கின்றன. அன்றைக்கு 1967-ல் ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் 100 இருந்தன. இன் றைக்கு 8,042. 1966 முடிய கூடுதலாகப் பாசனம் செய்யப்பட்ட நிலத்தின் அளவு 1,10,160 ஏக்கராகும். இன்றைக்கு 4,71,781 ஏக்கராகும். இவைகளெல்லாம் சிறு பாசனத் திட்டத்தின் மூலமாக நாம் செய்து இருக்கிற அரிய சாதனைகள் என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை.

திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றும் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் பேசுகின்ற நேரத்தில் கூட்டுத் துறை தமிழக அரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதையும், குறிப்பாகத் தூத்துக்குடியில் இருக்கின்ற உரத் தொழிற்சாலை பற்றியும், அது கூட்டுத் துறையில்தான் இருக்க வேண்டுமா, ஏன் பொதுத் துறையிலே இருக்கலாகாது என்கின்ற கருத்தையும் கேட்டார்கள். கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய்க் கான உரத் தொழிற்சாலைத் திட்டத்தை மாநில அரசுத் திட்டமாக, பொதுத் துறைத் திட்டமாக நாமே நடத்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தினோம். மத்திய அரசு இணங்க மறுத்து விட்டது. மத்திய அரசின் உதவி கிடைக்காத நேரத்தில் 85 கோடி ரூபாய் திட்டத்தை நம்மால் நிறைவேற்ற முடியாது. இதற்கிடையில் மத்திய வங்கிகள் (பைனான்ஸ் இன்ஸ்டியூஷன்)

இவைகளெல்லாம் தனியார் துறையில் உரத் தொழிற்சாலையை யாராவது நிறுவுவதாக இருந்தால், அதற்குப் பண உதவி செய்யத் தயாராக இருந்தன. இதைத் தனியார் துறைக்கு விட்டுவிடக் கூடாது, பொதுத் துறைக்கு இல்லை. மத்திய சர்க்காரும் கை விரித்து விட்டது. இந்தச் சூழ்நிலையில்தான் மாநில அரசு தலையிட்டு அதைக் கூட்டுத் துறையாக ஆக்கி அதில் தானும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு 26 சதவிகிதம் அரசுக்கும், 25 சதவிகிதம் தனியாருக்கும், மீதமுள்ள 49 சதவிகிதம் பொதுப் பங்குகள் என்ற வகையிலும் அந்தக் கூட்டுத்துறை முயற்சியில் நாம் ஈடுபட்டோமேயல்லாமல் பொதுத் துறை வேண்டாம் என்பதற்காக அல்ல; பொதுத் துறைக்கு வராமல் முழுக்க முழுக்கத் தனியார் துறைக்குப் போகக்கூடிய சூழ்நிலை. மத்திய அரசு நம்முடைய கோரிக்கையை மறுத்த காரணத்தால்—நாம் கூட்டுத் துறை என்ற அளவிலாவது வர வேண்டும் என்கின்ற முயற்சியை எடுத்துக் கொண்டோம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, 85 கோடி ரூபாய் மூலதனம் போட்ட நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் மட்டும் போட்ட, ஒரு தனி நபரின் நிர்வாகத்தில் இந்த உற்பத்தித் தொழிற்சாலையின் முழுப் பொறுப்பை விடுவது நியாயமா ?. அவர்கள் தங்களுடைய இந்தத் தொழிற்சாலைகள் மூலமாக காண்டிராக்ட்கள் எடுப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிற முறையிலேதான் நாம் 26 சதவிகிதம் வைத்து இருக்கிறோம். இதிலே இயக்குநர் என்கின்ற அளவிலேகூட அரசாங்கத்தின் சார்பில் 4 இயக்குநர்கள் அதிலே இருக்கின்றார்கள். இருக்கின்ற சங்கடத்தைச் சொன்னேன். பொதுத் துறைக்கு மத்திய சர்க்காரின் அனுமதி கிடைக்கவில்லை. இதைத் தவிர வேறு வழி இல்லாமல் நாங்கள் செய்து இருக்கிறோம். வேறு தவறு ஏற்படாமல் செய்வதற்கு அரசு கண்காணிப்போடு இருக்கும் என்ற ஒரு உறுதியை நான் நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய சர்க்கார் உரத் தொழிற்சாலைகள் எல்லாம் பொதுத் துறையில்தான் இருக்க வேண்டுமென்று 'இன்டஸ்டிரியல் பாலிசி ரெசல்யூஷன்' போட்டு இருக்கிறார்களே, அதை மத்திய சர்க்கார் மாற்றி விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் கேட்ட நேரத்தில் பொதுத் துறைக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்க வில்லை. ஆகவே, நாம் எடுத்த முடிவு என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. நம்முடைய அம்மையார் அவர்கள், தனி நாடு என்கின்ற அளவிற்கு நாம் கப்பல் விடப்போகிறோம்; மத்திய சர்க்காரை எதிர்த்து இந்தக் காரியத்தைச் செய்யப்போகிறோம் என்ற பொருள்படும்படியாக அவர்கள் பேசினார்கள். இன்று காலை யிலே பேசிய பெரியவர் மணலி அவர்கள் இந்தக் கப்பல் போக்கு வரத்துக் கழகத்தை நாம் ஏற்று நடத்துவது ஒரு துணிகரமான முயற்சி என்றும் சொன்னார்கள். இது எந்த முயற்சியாக இருந் தாலும், மத்திய சர்க்காரை எதிர்த்து நடைபெறுகிற முயற்சி அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் மத்திய அரசோடு வாதாட, போராடக் கடமைப்பட்டவர்கள் என்றாலும், நம்முடைய உரிமைகள் தேவை என்று கேட்பதில் அழுத்தம் திருத்தமாக இருப்பவர்கள் என்றாலும், இன்று இருக்கும் விதி முறைகளைத் தாண்டி மத்திய சர்க்காரை எதிர்த்துப் போகிற சூழ்நிலை இந்த அரசுக்கு என்றைக்கும் இருந்தது இல்லை, இன்றைக் கும் இல்லை, என்றைக்கும் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய இந்த பொறுப்பு, மாநில அரசுக்கு இருப்பதை விட மத்திய அரசுக்கு அதிகமாக இருக்கிறது என்பதை யும் நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஒரு சூழ்நிலை, ஹேமாவதி கட்டுகின்ற மைசூர் அரசு போலவோ அல்லது மத்திய சர்க்கார் இடுகின்ற ஆணைகளை மீறுகின்ற வேறு சில மாநில அரசுகளைப் போலவோ நம்முடைய தமிழ் நாடு அரசும் தள்ளப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் நாடு அரசில் இருக்கும் நமக்கு மாத்திரம் அல்ல, மத்திய அரசின் பொறுப்பில் இருப்பவர்களுக்கும் நிச்சயமாக இருக்கும் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது மத்திய அரசின் சப்ஜெக்ட் ஆயிற்றே! இதை எப்படி இங்கே எடுத்துக் கொண்டீர்கள்? இதைத் துணிச்சலாக எடுத்துக் கொண்டு கப்பல் விடுகிற நீங்கள்—அதற்குப் பூம்புகார் என்று பெயர் வைத்திருக்கிற நீங்கள்—ஏன் காவிரி நதியாகிய அந்த ஒப்பந்தத்தை வரவேற்கக் கூடாது. மத்திய சர்க்காரிடத்திலே 'ஷிப்பிங்' என்ற சப்ஜெக்ட் இருந்தாலும் கூட அவர்கள் இன்று தனியார் கம்பெனிகளுக்கெல்லாம் கப்பல் போக்குவரத்துக் கழகங் கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறார்கள். இப்படி, தனி

யாருக்குக் கொடுக்கும்பொழுது—வேறொரு மாநில அரசுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்ற கேள்வியை நாங்கள் திட்டக் குழுவில் எழுப்பியபோது, திட்டக் குழு அதற்கு விளக்கம் கொடுத்தது. அந்த விளக்கம் தெரிவித்த அடிப்படையிலேதான் இன்றைக்குப் 'பூம்புகார்' கப்பல் போக்குவரத்துக் கழகத்தை நாம் அறிவித்து இருக்கிறோம். அதற்காக ஒரு கோடி ரூபாயும் நாம் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இவைகளையெல்லாம் நிதி நிலை அறிக்கையிலே நான் விவரமாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

இந்தியாவிலே உள்ள போக்குவரத்துக் கப்பல்களில் 90 சதவிகிதம் பம்பாய்த் துறைமுகத்திலேதான் நிற்கின்றன. ஏன்? அந்தப் பெரும்பான்மையான தனியார் நிறுவனங்கள், கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள், அந்தப் பகுதியிலே உள்ள தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமானவை. மேற்குக் கடற்கரையிலே ஏற்பட்டு இருக்கிற இந்தக் கப்பல் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்து, கிழக்குக் கடற்கரையிலே அதை விரிவுபடுத்தி, நம்முடைய தமிழ் நாட்டினுடைய தேவைகள்—அகில இந்தியாவினுடைய தேவைகள் இவைகளையெல்லாம் பரவலாக நிறைவு செய்ய, இந்திய ஒருமைப்பாட்டிலே உள்ள அசைக்கமுடியாத உணர்வோடு—உண்மையான உணர்வோடு, இந்திய ஒருமைப்பாடு என்றால் உத்திரப் பிரதேசம், அடுத்தது பம்பாய் என்று இல்லாமல், இந்திய ஒருமைப்பாடு என்றால் அது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலேதான் என்கின்ற அந்த உணர்வை ஏற்படுத்துவதன் அடிப்படை நோக்கத்தை நெஞ்சத்திலே கொண்டுதான் இன்றைக்குக் கிழக்குக் கடற்கரையில் கப்பல் போக்குவரத்துக் கழகம் அதிகமாக வேண்டும் என்ற அந்தச் சூழ்நிலையை நாம் இங்கு உருவாக்கியிருக்கின்றோம்.

மத்திய அரசாங்கத்தினுடைய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேகூட அவர்கள் ஒரு கொள்கை வகுக்கிறார்கள். 90 இலட்சம் டன் கொள் அளவுள்ள கப்பல் திறனை வளர்க்க வேண்டும் என்பது மத்திய சர்க்காரினுடைய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய எண்ணமாகும். அதற்கு உறுதுணையாகத்தான் இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆரம்பமாகிறதே அல்லாமல் ஏதோ 'பூம்புகார்' என்கின்ற பெயர் அதற்கு வைக்கவேண்டுமென்பதற்காகவோ அல்லது தமிழ்நாடு முழுவதும் தனிக் கொடி பறக்கவிட்டு, தமிழ் நாட்டிலேயிருந்து, தனிக்கொடி பறக்கவிட்டு, அது உலகம் முழுவதும் அந்தக் கப்பல் சுற்றி வர வேண்டுமென்பதற்காகவோ அல்ல. 'பூம்புகார்' என்ற பெயர் வைத்ததனாலேயே கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மீது ஒரு காழ்ப்புணர்ச்சி வந்துவிடக் கூடாது. ஒரு முறை பெரியவர் பக்தவத்சலம்

அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது போலீஸ் நிலையம் என்று இருந்தவற்றை எல்லாம் காவல் நிலையம் என்று மாற்றி இருந்தார் கள். பிறகு மறுபடியும் பக்தவத்சலம் அவர்கள் ஆணையிட்டுக் காவல் நிலையங்களை அழித்துப் போலீஸ் நிலையம் என்று மாற்றிக் கொண்டு விட்டார்கள். நாவலரும் நானும் எதிர்க் கட்சியில் இருந்தபோது ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டோம். அதற்குப்பக்தவத்சலம் அவர்கள் சொன்னார்கள் ; ''திருவொற்றி யூரில் தி.மு. கழகம் காவலர் கூட்டம் போட்டது. அதற்குப் பிறகு தான், இந்தக் காவலர் என்பதை அடிக்கச் சொல்லி போலீஸ் என்று போட்டுவிட்டோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : காவலர் என்றால் வாட்ச்மேன் என்ற அளவிற்கு அர்த்தப்படும். அதைவிட உயர்ந்த வேலையைச் செய்கிறார்கள் போலீஸ்காரர்கள்! ஆகையாலே போலீஸ் என்று போட்டோம் என்றுதான் கனம் பக்தவத்சலம் அவர்கள் சொன்ன தாக ஞாபகம். காரணம் நானும் அப்போது இங்கே அங்கத்தின ராக இருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போலீஸ் செய்வது உயர்ந்த வேலை, வாட்ச்மேன் செய்வது தாழ்ந்த வேலை என்று சொல்லி, வாட்ச்மேனைத் தாழ்வாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது தெரிந்தால் முதலிலேயே அவர்கள் காவல் நிலையம் என்று போட்டிருக்கத் தேவையில்லை. காவல் நிலையம் என்று போட்டு விட்டு, பிறகு திருவொற்றியூரில் காவல் கூட்டம் நடந்த தும் மறுபடியும் காவல் நிலையத்தை மாற்றி போலீஸ் நிலையம் என்று போட்டு அதற்கு விளக்கமும் சொன்னார்கள். ஆகவே, தமிழ்ப் பெயரிலே இருக்கும் வெறுப்பின் காரணமாக—அதன் தொடர்பாக நல்ல காரியங்களை எல்லாம் எதிர்த்துப் பேசக் கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே அல்லாமல் வேறல்ல!


வாரியங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் களும் வாரியங்களை நிறைய வைத்துக் கொண்டே போகிறீர்கள் என்று எல்லாம் சொன்னார்கள். இந்த வாரியங்களை (கார்ப்பரே ஷன்கள்) அதிகமாக வைப்பதற்கு மிக முக்கியமான காரணம், நிர்வாகத்தைப் பரவலாக ஆக்கி, செம்மைப்படுத்த வேண்டும் என்பது ஒரு நோக்கம். அடுத்தது, அதிக நிதியை மாநில அரசோ, மத்திய அரசோ அதற்கு ஒதுக்க முடியாத சூழ்நிலையில், வங்கிகள்

உட்பட இன்றைக்கு இருக்கின்ற பைனான்ஸ்ஷியல் இன்ஸ்டி டியூஷன்களிடமிருந்து பெரும் தொகை பெறலாம் என்கின்ற அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில்தான், இந்தக் கார்ப்ப ரேஷன்கள், வாரியங்கள் வைக்கப்படுகின்றன. நம்மைவிடச் சிறிய மாநிலமான கேரளாவில் 'அரிஜன் டெவலப்மெண்ட் கார்ப்ப ரேஷன்', ரூரல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஃபிஷரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், 'ட்ரான்ஸ்போர்ட் கார்ப்ப ரேஷன்', 'எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன்' போன்ற பல கார்ப்ப ரேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த பெயர்களை மாத்திரம் சொன்னேன்.

அதைப் போலவே மகாராஷ்டிரா மாநிலத்தில் 'ஸ்மால் இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், இன்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் இன்டஸ்ட்ரியல் இன் வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன், ஆஃப் மகாராஷ்டிரா, சிடி இன்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் பைனான்ஸ் கார்ப்பரேஷன், எக்ஸிகியூட்டிவ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், விதர்பா டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ஆகிய வாரியங்கள் மகாராட்டிரத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மராட்டியத்தில் 'பாசன வாரியம்' என்று பாசனங்களுக்கான ஒரு கார்ப்பரேஷனை யும் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். உத்தரப் பிரதேச மாநிலத்தில் 'ஆஸ்பிடல் கார்ப்பரேஷன்' என்றும் ஒன்றை ஏற் படுத்தியிருக்கிறார்கள். ''பிரிட்ஜஸ் கார்ப்பரேஷன்' என்ற ஒன்றை யும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கார்ப்பரேஷன் கள் ஏற்படுத்துவது என்பது—ஏதோ வாரியங்கள், வாரியங்கள் என்று சொல்கிறார்கள், ஒருவர் தலைவரைப் போடுவதற்காக என்று சொல்கிறார்—நாங்கள் 2, 3 வாரியங்களை ஏற்படுத்தி, அவைகளில் தலைவர்களைப் போட்டதோடு சரி—இனிமேல் வாரியங்கள் ஏற் படுத்தினால் ஏதோ ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களைத் தலைவராகப் போடப் போகிறார்கள் என்ற ஐயத்தின் காரணமாக, எப்படி பூம்புகார் என்ற பெயர் பெற்றிருப்பதால் கப்பல் போக்குவரத்துக் கழகமே வேண்டாம் என்ற எண்ணம் ஏற்படுகிறதோ அப்படி ஏற் படாமல், வாரியங்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பயன் படக்கூடிய, நிர்வாகத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய, திறம்படச் செய்யக்கூடிய, அதிகப் பணவசதி பெறக்கூடிய சூழ்நிலையிலே அமைக்கப்படுகின்றன என்கின்ற எண்ணத்தோடு இவைகளையெல் லாம் வரவேற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

காவேரி பிரச்சினையைப் பற்றிப் பயங்கரமாகப் பேசப்பட்டது. ஏதோ காவேரி 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், இனிமேல் அடை


கர்நாடக அரசு
தமிழ்நாடு அரசு


1966ல்
1,10,160 எக்கர்
1974ல்
4,71,782
ஏக்கர்


பட்டுப் போய்விடும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. 18-2-74 உடன் அந்த ஒப்பந்தம் முடிவடைந்து விடுகிறது. அதற்குப் பிறகு காவேரித் தண்ணீர் தமிழ் நாட்டிற்கு வராமலே போய்விடவில்லை. 1924-ல் செய்து கொள்ளப்பட்ட அந்த ஒப்பந்தம் 1974-உடன் முடிந்துவிடுகிறது என்று பொருள் அல்ல; அதற்குப் பிறகு புதிய ஒப்பந்தம் எழுதப்பட வேண்டும் என்பதும் பொருள் அல்ல. காவேரி நீர் பற்றி எந்த ஒரு முடிவு எடுப்பதாக இருந்தாலும், அது தமிழ் நாட்டிலுள்ள ஒரு பெரிய பிரச்சினை என்ற அடிப்படையில் எல்லாக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தையும் அடிக்கடி கூட்டி, அவர்களுடைய சீரிய சிறந்த ஆலோசனைகளைப் பெற்றுத் தான், அந்த முடிவினைத்தான் மத்திய அரசினிடத்திலே நாங்கள் பேசும்பொழுது விவாதித்தோம். அந்த முடிவினுடைய மையத்தை வைத்துக் கொண்டுதான் பிரச்சினைகளை அணுகுகிறோமே அல்லாமல் வேறு அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன். காவேரி பிரச்சினையின் பல கருத்துக்களை எல்லாம் மத்திய சர்க்கார் போட்டு முடித்து விட்டார்கள். நாம் மிகுந்த பொறுமை யோடு இருக்கிறோம், இல்லை என்று மறுக்க வில்லை. ஏனென்றால் இந்திய ஒருமைப்பாட்டில் மற்ற மாநிலங்களுக்கு இருக்கின்ற அக்கறையில் எந்த அளவும் நமக்குக் குறைந்த அக்கறை இல்லை என்பதை நிரூபிக்கின்ற வகையில் நாம் பொறுமையோடு இருக் கிறோம். ஹேமாவதி அணையை அங்கே கட்டுகிறார்கள், தண்ணீர் அங்கிருந்து வருகிறது, நாம் ஏன் அதைத் தடுக்கக் கூடாது என்று அம்மையார் கேட்டார்கள். ஒரு முறை பட்டுக்கோட்டை சீனுவா சய்யர் அவர்கள் நீர்ப்பாசன மாநாட்டில் பேசும்பொழுது தமிழ் நாட்டிலிருந்து ஒரு பெரும் படை சென்று அங்கு இருக்கிற காவேரி அணையை உடைக்க வேண்டும் என்று கூடப் பேசினார்கள். அவைகளெல்லாம் தீவிர வாதத்திற்கு, வேகமான பேச்சுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும். சில பேர்களுக்குப் பேச்சில் வேகம் இருக்கும், செயல் மிக மிகச் சாதாரணமாக ஆகிவிடும். ஆகவேதான், பேச்சில் வேகத்தைக் காட்டி, செயலிலே எதையும் குறைத்துவிடக் கூடாது என்ற சூழ்நிலையில் இன்றைக்கு இந்த அரசு இந்தப் பிரச்சினையில் மிகுந்த பிடிவாதம் காட்டி வருகிறது. காவேரி ஆறு இல்லா விட்டால், காவேரி ஒப்பந்தத்தில் ஏதாவது சீர்கேடு ஏற்பட்டு விடுமேயானால், கர்நாடக மாநிலத்திற்கு ஒரு தலைப்பட்சமாக மத்திய அரசு ஏதாவது முடிவு எடுக்குமேயானால், 4·5 கோடி தமிழ் மக்களுடைய வாழ்வு அதோ கதி ஆகிவிடும் என்பதையும் அப்படி ஏற்படுகின்ற நேரத்தில் இந்த அரசு அதை நிச்சயம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது என்பதையும்


அன்றைக்குத் தமிழ் நாட்டிலிருக்கிற தி.மு.க. தோழர்களுடைய கரங்கள் மாத்திரமல்ல, எல்லாத் தமிழர்களுடைய கரங்களும் அன்றைக்கு யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை எதிர்க்க வேண்டிய அளவுக்கு ஓங்கி உயரும் என்ற உறுதியை நாம் நிச்சயமாகப் பெற்றிருக்கின்றோம். ஆகவே, இதிலே எந்த விதமான ஐயப்பாடும் தேவையில்லை. மத்திய அரசு நீதி வழங்கும் என்று எதிர் பார்ப்போமாக! கருநாடக அரசும், கேரள அரசும், தமிழக அரசும் கூடிப் பேசி சுமுகமான முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்போம் என்கின்ற அளவில் இந்தப் பிரச்சினை பற்றி என்னுடைய கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றும், பல பிரச்சினைகள்-"இங்கே சோஷலிஸம் கிடையாது; தேசிய மயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல" என்றெல்லாம் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை நானும் ஒத்துக் கொள்கிறேன். தேசிய மயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல. ஆனால், தேசிய மயக் கொள்கை சோஷலிஸத்தினுடைய வெற்றி முகட்டிற்குச் செல்லுகின்ற வழியில் உள்ள ஒரு கட்டம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, அந்தக் கட்டத்தை நாம் படிப்படியாக இன்றைக்குச் செய்து வருகிறோம். முடிவான சோஷலிஸத்தைப் பெறுவதற்காக நாம் செய்திருக்கின்ற பல்வேறு காரியங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் பல இடங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளையெல்லாம் மீண்டும், மீண்டும் இங்கே எடுத்துச் சொல்லவேண்டும் என்று விரும்பவில்லை.




அதிகமான உதவி


35,000 பஸ் தொழிலாளர்
ஓய்வு ஊதியத் திட்டம்
ஓய்வு ஊதியம்


தேசியமயம்

தொழிலாளர்களைப் பொறுத்த வரையில்கூட இன்றைக்குத் தொழிலாளர்கள் நல இன்ஸ்ஷூரன்ஸ் திட்டம் என்கின்ற திட்டத்தைப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில்தான் அவர்களுக்கென்று வரையறுக்கப்பட்ட சட்ட வரம்பிற்குள்ளாகச் செலவிட வேண்டிய தொகையை மீறிச் செலவழித்திருக்கிறோம். ஒரிஸாவில் சட்ட வரம்புக்குள்ளே செலவழிக்கிறார்கள். குஜராத்தில் 21 இலட்சம் ரூபாய் சட்ட வரம்புக்கு மீறி தொழிலாளர் நல இன்ஸ்ஷூரன்சுக்கு அதிகமாகச் செலவழிக்கிறார்கள். அரியானாவில் சட்ட வரம்பிற்குள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பீகாரில் ரூ. 9 இலட்சம் அதிகமாகச் செலவழிக்கிறார்கள். ஆந்திராவில் ரூ. 7 இலட்சம் அதிகமாகச் செலவழிக்கிறார்கள். மராட்டியத்தில் சட்ட வரம்புக்குட்பட்டுத்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மத்திய பிரதேசம் சட்ட வரம்புக்குள்தான் செலவழிக்கிறார்கள். மேற்கு வங்கம் ரூ. 23 இலட்சம் அதிகமாகச் செலவழிக்கிறார்கள். அசாம், சட்ட வரம்புக்குள் செலவழிக்கிறார்கள். கேரளா சட்ட வரம்புக்குள் செலவழிக்கிறார்கள். தமிழ் நாடு மாத்திரம் சட்ட வரம்பை மீறி, தொழிலாளர் நல இன்ஷூரன்ஸ் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட ரூ. 7,8 கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்திருக்கிறது. அதிகமாகச் செலவழிக்கின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ் நாடு தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

35,000 பஸ் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு அகில இந்தியாவிலும் ஒரு பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற அரசு தமிழ் நாடு அரசு அல்லவா? இதைப் பாராட்டக் கூடாதா? உங்களிடத்திலே பாராட்டை இப்படி வேண்டி வேண்டிக் கேட்கிறேன். ஒரு முறை பாராட்டக் கூடாதா? கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை வாணி மஹால் தியேட்டரில் ஒரு பாராட்டுக் கூட்டத்திலே பேசினார்கள். மறந்திருக்க மாட்டார்கள்! எவ்வளவோ அரசியல் சுழற்சியில் எத்தனையோ விஷயங்கள் மறந்து போயிருக்கின்றன. அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஒரு காலத்திலே கம்யூனிஸ்டு கட்சிக்குத் தமிழ் நாட்டில் ஆபத்து என்ற காலத்திலே அது அடக்கு முறைக்கு ஆளான நேரத்தில் அவைகளை எடுத்துச் சொல்லி, கம்யூனிஸ்டு கட்சிக்கு உயிரூட்டம் தந்தவர்களிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே முதன்மையானவர் கருணாநிதி என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். இன்றைக்குப் பாராட்டாவிட்டாலும் அன்றைக்குப் பாராட்டியதை நான் நினைத்துக் கொண்டு இன்

றைக்கு மகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைக்கு மணலி அவர்கள் பாராட்டினார்கள். அவர்கள் பேசும்பொழுது நான் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு சொன்னார்கள். நம்முடைய முஸ்லிம் லீக் கட்சியினுடைய தலைவர் திருப்பூர் மொய்தீன் மிகுந்த உருக்கத்தோடு பேசினார்கள். நம்முடைய பெருமாள் அவர்கள் பேசினார்கள். சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். இந்த விவாதம் தொடங்கிய போது கொஞ்சம் சூடாக ஆரம்பித்தாலும் நண்பர் ராஜகோபால் பேசும்பொழுது, மறுபடியும் எதிர்க்கட்சியினுடைய தலைவர்கள், தமிழரசுக் கழகமானாலும் மற்ற காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட, அத்தனை பேர்களும் பேசிய நேரத்தில் உள்ளபடியே இந்த நிலைமைகளை யெல்லாம் நல்ல முறையில் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். மிகுந்த உருக்கத்தோடு பேசியிருக்கின்றோம். எவ்வளவு நம்மிடையே மனமாச்சரியம் இருந்தாலும், எவ்வளவு கட்சி வேறுபாடுகள் இருந்தாலும், எவ்வளவு கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் இந்தத் தமிழ் சமுதாயத்திற்காகச் சில காரியங்களைச் செய்வதற்காக மக்கள் எங்களைப் பணித்திருக்கிறார்கள், ஐந்தாண்டுக் காலத்துக்கு. நம்முடைய நண்பர் பொன்னப்ப நாடார் அவர்கள் 'இதுதான் கடைசி பட்ஜெட்' என்று கூடச் சொன்னார்கள். நான் அதற்காக வருத்தப்படவில்லை. ஒரு வேளை ஐந்தாண்டுக் காலம் முடியாமல் 1976-ஆம் ஆண்டு பட்ஜெட் வைக்காமலே கூட இந்த அரசு கவிழ்ந்துவிட வேண்டும் என்று கருதினார்களோ என்னவோ தெரியாது. இது கடைசிபட்ஜெட்டாக இருக்கிற காரணத்தினால்தான் படம் எல்லாம் எடுத்தார்கள் என்றுகூடச் சொன்னார்கள். ஏன்? சந்தேகப்படுகிற நேரத்தில்-கடைசியாக ஒரு ஆளைப் படம் எடுப்பது என்றாலே . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போன தடவை 1971-ல் எலெக்ஷன் வந்தது. 1972-ல் நடக்க வேண்டியது. அதே மாதிரி இப்பொழுதும் வந்து விடுமோ என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிச் செய்வார்கள. இந்திரா காந்தி என்பது இப்பொழுது எங்களுக்குத் தெரிவதைவிட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும் என்று கருதுகிறேன். செய்தால் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்களாகவே சென்று நாளு கலைத்து விடுகிறேன் என்று சொன்னீர்கள். இந்திரா காந்தியா செய்தார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் கலப்பதாகச் சொன்னார்கள். பிறகு நானும் கலப்பதாகச் சொன்னேன்.

ஆகவே, இதைத் தமிழ் மக்கள் பார்த்து, முன்னேற்றக் கழக அரசு ஒரு ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அல்லது 10 ஆண்டுக் காலத்திற்கு 1967-லும் சரி, அல்லது இப்பொழுதும் சரி, எங்களிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள் என்றால் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு கட்சி, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளை எடுத்துச் சொல்லி, அதே நேரத்திலே அந்த வேறுபட்ட கருத்துக்கள் எல்லாம், ஆட்சியை ஒழுங்காக நடத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கின்ற விதத்திலே எழுதிப் பேசி எங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். வேறு யாருக்கும் இடம் தராமல் நாங்களே தான் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறோம் என்கின்ற பிடிவாதம் நிச்சயமாக எங்களிடத்திலே கிடையாது. ஆனால், ஒன்றைச் சொல்லி—இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். ஏதோ தமிழ் நாட்டிலே மலையாளிகளை தமிழர்கள் துரத்துகிறார்கள், அடிக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிப்பட்ட பேச்சுக்கூட நல்லது அல்ல. ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையினர் இருக்கிறார்கள். கேரளத்திலே தமிழர்கள் வாழ்கிறார்கள், ஆந்திரத்திலே வாழ்கிறார்கள். இங்கே ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். கேரளர்கள் வாழ்கிறார்கள். பம்பாயில் தமிழர்கள் வாழ்கிறார்கள். பம்பாயிலே தமிழர்களுக்கு, மலையாளிகளுக்கு, ஆந்திரர்களுக்கு, கன்னடியர்களுக்கு ஏற்பட்ட கதியை எண்ணிட நாமெல்லாம் நம்முடைய கடுமையான கண்டனத்தை அரசியல் விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டு அத்தனை பேரும் தெரிவித்திருக்கின்றோம்.

அதே நேரத்தில், திருவனந்தபுரத்திலே இருக்கிற தமிழர்கள், எவ்வளவு அடக்க உணர்ச்சியோடு நடந்து கொள்கிறார்களோ, அதேபோல இங்கே இருக்கின்ற மற்ற மாநிலத்துக்காரர்களும் அடக்க உணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டும். அது மிக மிக முக்கியம். அதை விட்டுவிட்டு, ஏதோ இங்கே இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் மிகச் சாதாரணமானவர்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. தமிழ் நாட்டில் மலையாளிகளுக்கு இடமுண்டு; தெலுங்கர்களுக்கும் இடமுண்டு; சிறுபான்மையோருக்கும் இடமுண்டு; குஜராத்தியருக்கு இடமுண்டு; அத்தனை பேரும் பாதுகாக்கப்படுவார்கள்.

ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன். தென்னிந்தியாவிலே ஒரே ஒரு கேரள ராஜ்யம்தான் இருக்கலாம் ; இரண்டு கேரள ராஜ்யங்களுக்கு இடமில்லை என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

# சட்டமன்ற மேலவையில்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நிதி நிலை அறிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், கட்சியின் தலைவர்களும் தங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திற்கே உரிய முறையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த வரவு-செலவுத் திட்டம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப்போல் பொது மக்களை ஒவ்வொரு ஆண்டும் அச்சம் ஊட்டுகின்ற வகையிலே வெளி வருகிறது, என்னென்ன வரிகள்வருமோ என்று பயப்படுகின்ற நிலையிலே வெளி வருகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் வரிகள் சிலவற்றை விதித்திருக்கிறோம் என்கின்ற அறிவிப்பைத் தந்தாலும், அது எந்தப் பகுதி மக்களைப் பாதிக்கிறது என்பதை ஆழ்ந்து சிந்தித்தால், அதை ஒரு வரி விதிப்பு அல்லது மக்களை வாட்டுகின்ற தன்மையிலே உருவாக்கப்பட்டது என்று கூறிடுவதற்கு இடமே இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் சக்தி மோகன் அவர்கள், இடைத் தேர்தல்களுக்குப் பிறகு வருகின்ற நிதிநிலை அறிக்கை என்கின்ற காரணத்தினால், வாக்கு அளிக்காதவர்களை எல்லாம் தண்டிக்கின்ற முறையில் இந்த அறிக்கை அமையும் என்று சிலர் எதிர்பார்த்ததாகவும், அதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு வெளி வந்திருப்பதாகவும் எடுத்துச் சொன்னார்கள். எந்த ஒரு ஆட்சியானாலும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு, பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு இடையிலே வருகின்ற இன்னல்களைப் பற்றிச் சிந்திக்காமல், இடையிலே வழங்கப்படுகின்ற தீர்ப்புகளைப்பற்றிக் கவலைப்படாமல், தன்னுடைய ஆட்சிக்காலத்தில் தான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்பை இனிதே நிறைவேற்றுவதற்கும், கடமையைச் செம்மையாகச் செய்து முடிப்பதற்கும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையிலேதான் நிதிநிலை அறிக்கையினுடைய தொடக்கத்திலேயே கடமையைச் செய்கின்ற மழையைப்பற்றி வள்ளுவர்ப் பெரியார் எந்த அளவுக்குப் புகழ்ந்து வைத்திருக்கின்றார் என்கின்ற குறளை இணைத்து, இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

'இன்னு செய்தாரை ஒருத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' என்பதையும்

இந்த அரசுப் பொறுப்பில் வீற்றிருக்கின்ற நாங்கள் யாரும் மறந்து விடவில்லை. ஆகவே வாக்கு அளிக்காதவர்களைத் தண்டிப்பது என்பதல்ல. வாக்கு அளிக்காதவர்கள் வாக்களித்தவர்கள் அனைவருக்கும் சேர்த்துத்தான் ஒரு அரசு தன்னுடைய காரியங்களைச் செய்திட வேண்டுமே அல்லாமல், அவர்களைப் பாகுபடுத்தி, வாக்கு அளித்தவர்களுக்கு நன்மைகளைச் செய்வதும், வாக்கு அளிக்காதவர்களுக்கு நன்மைகள் அல்லாதவற்றைச் செய்வதும் மரபும் அல்ல—ஜனநாயகமும் ஆகாது. அந்த உணர்வின் அடிப்படையிலே தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். பொதுவாகவே, வரவு-செலவுத் திட்டம் வெளியாகின்ற நேரத்தில், அது எந்தெந்த நிலைமைகளோடு தொடர்பு கொண்டு வெளியாகிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. நேற்றுப் பேரவையிலே நான் பதிலளிக்கின்ற நேரத்திலேகூட அதைக் குறிப்பிட்டேன். இங்கேயும் சுட்டிக் காட்டுவது கடமை என்று நான் கருதுகின்றேன். வளர்ச்சி வேகத்தை மேலும் அதிகப்படுத்துவதற்கும், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் ஆகிய இத்தனை பிரச்சினைகளோடு ஒரு வரவு-செலவுத் திட்டம் இணைந்திருக்கின்றது. நம்முடைய மாநில வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், விலைவாசிகளைக் குறைப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது என்கின்ற இந்தப் பணிகளை மாநில வரவு-செலவுத்திட்டம் என்கின்ற கருவியினுல் நாம் முழுமையாகச் செய்து முடிக்க முடியுமா என்ருல், இயலாது என்பதற்கு நூற்றுக் கணக்கான ஆதாரங்களை இந்த மாமன்றத்திலே பேசிய பல்வேறு உறுப்பினர்களும் மிகத் தெளிவாக, அழகாக, எடுத்துக் கூறியிருக்கின்ருர்கள். மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டம்தான் விலைவாசிகளுடைய ஏற்றத்திற்குக் காரணமாகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமைந்து விடுகின்ற சூழ்நிலைகளைத் தொடர்ந்து நாம் கண்டு வருகிருேம். மாநில அரசு ஒரு பற்ருக்குறை வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்குமேயாளுல், அதிலே துண்டுவிழுகின்ற அந்தத் தொகையை ஈடு கட்டுவதற்காகச் சில வரிகளைப் போடுகின்ற அதிகாரத்தைத்தான் பெற்றிருக்கின்றது. ஆனல் மத்திய சர்க்காருடைய வரவு-செலவுத் திட்டம் வெளியாகி, பற்ருக்குறை வரவு-செலவுத் திட்டமாக அது உருவெடுத்து, துண்டு

விழுகின்ற தொகையை ஈடு கட்டுவதற்காக அவர்கள் வரிப் போட்டும் மாளாமல், தொடர்ந்து பணப்புழக்கத்தை அதிகப்படுத்த வேண்டிய நெருக்கடிக்கு அது தள்ளப்படுகின்ற நேரத்தில், விலைவாசிகள் கட்டுக்கடங்காத அளவுக்கு உயர்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதைத் தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுகின்ற நிலைமைகளையும் நாம் கண்டு வருகின்றோம். நேற்றுக் கூடச் சிலர் பேசியதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருந்தன. பேரவையில் பேசிய பேச்சுக்கள்கூட இன்று காலைப் பத்திரிகையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசிய பேச்சுக்கள்கூட தவறான முறையில் பிரசுரிக்கப்பட்டதாக நான் அறிகிறேன். மாநில அரசு நோட்டு அடித்துக் கொள்ளலாம் என்கின்ற முறையில் ஒரு பற்றுக் குறை பட்ஜெட்டைத் தயாரித்து இருக்கிறது என்கின்ற அளவிலே கூடச் செய்திகள் போடப்பட்டன. நோட்டு அடிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மாநில அரசினுடைய வரையறுக்கப்பட்ட அதிகாரங்களும், மாநில அரசுக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்களும், எந்த அளவுக்கு ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளே அமைந்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்திடுகின்ற நேரத்தில் பணப் புழக்கத்தால் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரச் சிக்கலை நிவர்த்திப்பதற்கு, தேசிய அளவில் எழுந்திருக்கின்ற பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, மத்திய அரசு, தேசிய மட்டத்தில் விரைவாக ஒரு ஆலோசனையை நடத்தியாக வேண்டும் என்பதையும், எல்லா மாநில முதலமைச்சர்களுடைய மாநாட்டைக் கூட்டி ஒரு முடிவினை எடுத்திட வேண்டும் என்பதையும் இந்த வரவு-செலவுத் திட்டத்தின் தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றேன். மாநில முதலமைச்சர்கள் எல்லாம் பொருளாதார நிபுணர்கள் என்கின்ற எண்ணத்தில் அவர்களை எல்லாம் அழைத்து மத்தியில் ஒரு மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்கின்ற கருத்துப்பட நான் அதைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கின்ற முதலமைச்சர்களும்-அவர்கள் சார்ந்திருக்கின்ற பொருளாதார நிபுணர்களுடைய கருத்துக்களைப் பெற்றிடவும், அவைகள் எல்லாம் ஒரு தொகுப்பாக-ஒரு இடத்திலே ஆராயப்படவும் அவைகளிலிருந்து கிடைக்கின்ற பல்வேறான கருத்துக்களின் சங்கமத்திலிருந்து. ஒரு புதிய கருத்து உருவாகவும், அதன் காரணமாக, இன்றைக்கு எழுந்திருக்கின்ற தேசிய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வழிவகைகள் கிடைக்குமா என்று பார்ப்பதற்காகவும்தான் முதலமைச்சர்களுடைய மாநாட்டை அவசரமாக மத்திய அரசு கூட்டி, தேசிய நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு முன் வர வேண்டும் என்று நான் வரவு-செலவுத் திட்டத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

இங்கு பேசிய—எதிர்க்கட்சித் தரப்பிலே பேசிய—மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட இந்த வரவு செலவுத் திட்டத்திலும் நாம் வரிகளை அதிகமாகப் போட்டிருக்கிறோம்—சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடிய வரிகளை எல்லாம் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இந்த அரசு உருவான நேரத்திலிருந்து, அவர்களுடைய மறைவுக்குப் பிறகு அவர் வழிநின்று நடைபெறுகின்ற இந்த அரசினுடைய வரிக்கொள்கையைப் பொறுத்த வரையில், தாங்கக் கூடியவர்களுக்கு வரி விதித்தல், தாங்க முடியாதவர்களுக்குப் புதிதாக வரிப் போடாதிருத்தல், வரிவிதிப்பின் காரணமாக, கட்டுக் கடங்காத அளவுக்கு விலைவாசி போகாமல் பார்த்துக் கொள்ளுதல் என்ற இந்த அடிப்படையில்தான் வரி விதிப்போ, வரி மாற்றங்களோ இருக்க வேண்டும் என்கின்ற கொள்கையை உடைய இந்த அரசு, சில வரி மாற்றங்களை இந்த வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்திருக்கின்றது. குறிப்பாக, பத்து கோடி ரூபாய் துண்டு விழுகின்ற நிலையைச் .சரிக்கட்டுவதற்காக, நாம் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் என்று அறிவித்திருப்பதில், மோட்டார் வாகன வரியைச் செம்மைப்படுத்துவதன் மூலமாக, அந்த வரியைச் சீர் திருத்துவதன் மூலமாக, 6.5 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நமக்குக் கிடைக்கும். பல ஆண்டுகளாக, வியாபாரிகளுடைய கோரிக்கை பல முனை வரியை ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்பதாகும். அந்த வகையிலே 59 பொருள்களின் மீதுள்ள வரிகளை-பலமுனை வரிகளை ஒரு முனை வரியாக மாற்றியதன் காரணமாகவும், 50 ஆயிரம் ரூபாய் வியாபாரம் செய்கின்ற சிறு வியாபாரிகளுக்குத் தொந்தரவு இல்லாத வகையிலே விற்பனை வரிச் சலுகை அளித்தும், பத்து இலட்சம் ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்கிறவர்கள், அதற்கு மேற்கொண்டு வியாபாரம் செய்கின்றவர்களுக்கு 5 சதவீதம் என்கின்ற சர்சார்ஜ்ஜை 10 சதவிகிதமாக உயர்த்தியும், அதன் வாயிலாகக் கிடைக்கின்ற தொகை, 3.5 கோடி ரூபாய், ஆக மொத்தம் பத்து கோடி ரூபாய் இந்த வரிச் சீரமைப்பின் மூலமாக நாம் பெறுகிறோம்.

இன்னொன்று, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்களும் சொன்னார்கள். தமிழரசுக் கழகத் தலைவரவர்கள் அதற்கான விளக்கங்களையெல்லாம் அவருடைய உரையிலே எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் பேசுகிற நேரத்தில் நேற்றைய தினம் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு, மாநில அரசைப் பற்றி ஒவ்வொருவரும் ஒரு கோணத்தில் பேசி

யிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் தாமோதரன் அவர்களும் நேற்றைய தினம் பேசினார்கள். ஆக, மத்திய அரசைப் பற்றியே இந்த பட்ஜெட்டிலே அதிகமாக இருக்கிறது என்று அங்கலாய்த்துக் கொள்ளுகின்ற எதிர்க்கட்சிக்காரர்களானாலும், அல்லது இதைப் பற்றி விமர்சிக்கின்ற தோழமைக் கட்சிக்காரர்களானாலும், அல்லது ஆளும்கட்சிக்கு ஆதரவாகச் சில கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களானாலும் இந்த மாநில அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தோடு மத்திய அரசினுடைய வரவு செலவுத் திட்டத்தை ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. நான் நேற்றைக்கே மிகத் தெளிவாகச் சட்டப் பேரவையிலே குறிப்பிட்டிருக்கிறேன். மத்திய அரசைக் குற்றம்சொல் வதற்காகவோ, அல்லது குறைகூறுவதற்காகவோ, அரசியல் ரீதியில் தர்க்கித்துக் கொள்வதற்காகவோ வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அர அரசைப் பற்றிய குறிப்புகள் வரவில்லையென்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கிருக்கிற நிதி ஆதாரங்களில் மத்திய அரசு இன்னும் எந்த அளவிற்கு நம்பால் கருணை காட்டியிருக்கலாம், நான் கருணை என்று சொல்வதுகூட அடக்க உணர்வோடு சொல்லுகின்ற வார்த்தையே அல்லாமல் நாம் உரிமையோடு கேட்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்—அந்தக் காரணத்தினால் வேறு பல காரியங்களுக்கு வேறு பல தலைப்புகளில் வேறு சில மாநிலங்களுக்கு நிதியை அள்ளி அள்ளி வழங்கியிருக்கின்ற மத்திய அரசினுடைய நிதிக்குழுவானாலும், திட்டக் குழுவானாலும், ஏன் நம்முடைய மாநிலத்திற்கு அல்லது நம்மைப்போன்ற வேறு சில மாநிலங்களுக்கு அந்த நிதி ஆதாரங்களைத் தருவதிலே அது தயக்கம் காட்டியது என்ற குறிப்புகளை ஒரு வரவு செலவுத் திட்டத்தில் சுட்டிக் காட்டாமல் இருந்தால் கடமை தவறியவர்களாக ஆகிவிட்டோம் என்ற குற்றத்திற்கு ஆளாவோம் என்பதற்காகவும், நம்முடைய மாநிலத்து மக்கள் ஏன் இந்த நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்குப் பயனுள்ள விதத்திலும்தான் வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டதேயல்லாமல் மத்திய அரசைக் குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல. மத்திய அரசைக் குறை கூறவேண்டுமே யானால் அதை வரவு செலவுத் திட்ட அறிக்கையிலேதான் அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதல்ல. மேடைகளிலே பேசலாம், ஏடுகளிலே எழுதலாம், டில்லியிலே சென்று நிருபர்களிடத்திலே கூடப் பேசலாம். இங்கே சென்னையில் மத்திய அரசைக் குறை கூறிவிட்டு, டில்லிக்குச் சென்றதும் அங்கே போய் பாராட்டுகின்ற சூழ்நிலையெல்லாம் இன்றைக்கிருக்கின்ற இந்த அரசுக்கு என்றைக்கும் கிடையாது என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். ஆகவே நாம் எடுத்த நிலை துணிவான நிலை. அதே நேரத்தில் உறவு கெடாத நிலை. அதேநேரத்தில் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் வராத நிலை.

பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய முன்னிலையிலேயே தமிழக அரசினுடைய கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். உறவுக்குக் கை கொடுப்போம்., அதே நேரத்தில் உரிமைக்குக் குரல் கொடுப்போம். இதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நிலை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அது, அரசு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை இதுதான். உறவுக்குக் கை கொடுப்பதும், உரிமைக்குக் குரல் கொடுப்பதும் தான் நம்முடைய நிலைமையாகும். நேற்று ஆறுமுகசாமி அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசைக் குறைகூறக்கூடாது, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் பெரிதாக ஆக்கக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள். இந்தியப் பாதுகாப்பு என்பது தனி விஷயம். இந்தியாவிற்கு ஒரு நெருக்கடி வருகிறது, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒன்று வருகிறதென்றால் எல்லாவற்றையும் மறந்துவிட்டு நாம் அந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்குத்




தயாராக இருக்கிறோம். நான் இன்னும் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். இந்தியாவிற்குப் பாகிஸ்தானால் ஆபத்து வந்த நேரத்தில் இந்தியாவிலேயே யுத்த நிதிக்காக 6 கோடி ரூபாயைத் திரட்டிக் கொடுத்த ஒரேயொரு மாநிலம் நம்முடைய தமிழ்நாடு தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன்.

இதை விடப் பெரிய மாநிலம், 82 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம், 11 கோடி மக்களைக் கொண்டிருக்கின்ற உத்திரப் பிரதேசம்கூட இந்த 6 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி செய்யவில்லை. அதற்கு முன்பிருந்த தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய அந்தப் பரிபாலன காலத்திலேகூட, வந்த யுத்தங்களைத் தடுக்கின்ற அந்தக் காலத்தில்,—நான் அவர்களுடைய நாட்டுப்பற்றைக் குறை கூறுவதாகச் சொல்லக்கூடாது—இந்த அளவு யுத்த நிதி தந்ததாக வரலாறு கிடையாது. அதை எதிர்க்கட்சிக்காரர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகின்றேன்.'

அந்த அளவுக்கு நாம் பொறுப்புணர்ச்சியோடு இந்தியாவினுடைய பாதுகாப்பிலே நடந்து காட்டியிருக்கிறோம். சொல்லளவிலே அல்ல, செயலளவிலே நடந்து காட்டியிருக்கிறோம். ஆகவே, இந்தியாவினுடைய பாதுகாப்பிற்கு ஒரு ஊனம் வருமேயானால், ஒரு இடர் வருமேயானால் அந்த நேரத்திலே நாம் இந்தப் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. பிரச்சினைகளைப் பேசுவது, நாட்டு மக்களை வாழ வைக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலமும் சேர்ந்ததுதான் நாடு. அந்த நாட்டு மக்கள் இந்த மாநிலத்திலும் இருக்கிறார்கள். அந்த மாநிலத்தில் இருக்கின்ற மக்களை வாழ வைப்பது, நாட்டு மக்களை வாழ வைப்பதுதான்! அவர்களை வாழ வைப்பதற்கு, இன்றைக்கு நமக்குள்ள அதிகாரங்களின் வாயிலாகத் திரட்டக்கூடிய நிதி ஆதாரங்கள் மிகக் குறைவானவைகளாக இருக்கின்றன. ஆகவே, நீங்கள் போதுமான அளவுக்கு நிதி தாருங்கள் என்று கேட்கிறோம். ஏதோ, அவர்களுடைய கஜானாவிலிருந்து திறந்து அதைத் தர வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. இங்கிருந்து எடுத்துச் செல்கின்ற வரிப் பணத்தை, மீண்டும் மாநிலங்களுக்குப் பங்கிடுகின்ற நேரத்தில், அநீதி வழங்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதைத்தான் நாம் சுட்டிக் காட்டுகின்றோம். 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலும், 6-வது நிதித் திட்டக் குழுவிலும் நம்முடைய மாநிலம் பெருமளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே மெத்த ஆதங்கத்தோடு எடுத்துக் காட்டியதைப்போல், 5-வது ஐந்தாண்டுத் திட்டம் வருமா, வராதா என்பது கேள்விக் குறியாக இன்றைக்கு நின்றுகொண்டிருக்கிறது. அது வராமல், இடையிலே விடுமுறை வந்தால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமிநாதன் அவர்களுக்குக்கூட மகிழ்ச்சியாக இருக்கும். அவர்கள் சென்ற முறை இங்கே பேசும் போது சொன்னார்கள்—(இப்போது வரவில்லை; தேர்தலில் ஈடு

பட்டிருக்கிறார்கள்)—திட்டத்திற்கு விடுமுறை வழங்க வேண்டு மென்று சொன்னார்கள். அதையெல்லாம் மனத்திலே வைத்துக் கொண்டுதான், நான் வரவு செலவுத் திட்டத்தை எழுதுகிற நேரத்திலேகூட, அந்த வார்த்தையைக் குறிப்பிட்டேன். மத்திய அரசினுடைய திட்டக்குழு போகிற போக்கைப் பார்த்தால், திட்ட விடுமுறைகூட வந்துவிடுமோவென்று அஞ்சுகின்றேன் என்று நான் அதிலே மிக எச்சரிக்கையோடு ஒரு வாக்கியத்தைக் குறிப் பிடப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்திருக்க முடியுமென்றே கருதுகின்றேன். 5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் ஆண்டில், ஏப்ரல் திங்களில் நாம் அடி எடுத்து வைக்க வேண்டும். ஆனால் என்ன செய்தி வருகிறது? இன்னும் மூன்று மாத காலம் அல்லது 6 மாத காலம் ஆகலாம், 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய இறுதி வடிவம் கிடைப்பதற்கு என்று செய்தி வருகிறது. 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான திட்டக்குழுவில் இருந்த முக்கியமானவர், அதைப்பற்றிப் பேசுகிற கூட்டத்திற்கு முதலமைச்சர்களெல்லாம் செல்லுகிற நேரத்தில், முதல்நாளே பொறுப்பிலிருந்து விலகி விடுகிறார். பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. 55,000 கோடி ரூபாய் திட்டமென்பது அகலக் கால் வைப்பது, இந்தக் காரணத் தினால் அவர் விலகிவிட்டார் என்று செய்தி வருகிறது. டெல்லி யில் உள்ள முக்கியமான வட்டாரங்களில் விசாரித்தால், 55,000 கோடிக்குத் திட்டம் போட்டால்தானே, கொஞ்சமாவது நாம் குறிக்கோளை அடைய முடியும் என்று டெல்லி வட்டாரத்திலே முக்கியமானவர்கள், நானும் திரு. மாதவன் அவர்களும் சென்ற நேரத்தில் எங்களிடத்தில் தெரிவிக்கிறார்கள். ஆக, போடும் பொழுதே இதை அடையமாட்டோம் என்கின்ற எண்ணத்தோடு போட்டு, அதைப் போட்டதையும் இன்னும் 6 மாத காலத்திற்கு இறுதி வடிவம் தர மாட்டோம் என்கின்ற அளவுக்கும் வந்தால், கதைகளிலே சொல்வார்கள், பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர் என்று கேட்டு, 4 பேர் என்று மூன்று விரலைக் காட்டி, 2 என்று எழுதுவதுபோல, இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டம் ஆகிவிடுமோ என்கின்ற பயம் எனக்கு இருக்கின்றது. ஆகவேதான் இந்த 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு அது 55,000 கோடியைக் கொஞ்சம் குறைக்க வேண்டும் என்கின்ற நிலை வந்தா லும்கூட எது முடிவான திட்டம் என்பதை விரைவிலே அறிவிப் பார்களேயானால், நாம் திட்டத்தோடு செயல்பட முடியும். திட்ட மில்லாமல் ஒரு திட்டம்; அதைத்தான் நான் வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே சில இடங்களிலே குறிப்பிட்டுக் காட்டியிருக் கின்றேன். மத்திய சர்க்காரை எப்படிக் குறை கூறாமல் இருக்க

முடியும்? 25,000 கோடி ரூபாய்க்கு 4-வது ஐந்தாண்டுத் திட்டம் போட்டபோது, நடப்பு ஆண்டில் 129 கோடி ரூபாய், நமக்குத் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. ஆனால் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அடி எடுத்து வைக்கிற முதல் ஆண்டில், 129 கோடி ரூபாய்கூட இல்லை; 108-லிருந்து 118 கோடி ரூபாய்க்குள்ளே திட்டத்தை வைத்துக்கொள் என்று சொன்னால், 25,000 கோடியை 55,000 கோடியாக ஆக்குவானேன்; தேவையில்லை! அதை இரண்டு மடங்கு அதிகமாக ஆக்கிவிட்டு, 129 கோடியைக் குறைத்து 108 அல்லது 118 கோடி அல்லது அதற்குள்ளேவைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவது பொருத்தமற்ற வாதம்; நமக்குப் போதுமானதல்ல என்பதைச் சுட்டிக் காட்டத்தான், மத்திய சர்க்காரை நாம் குறை கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம்; திட்டக் குழுவை நாம் குறை கூற வேண்டியவர்களாக இருக்கின்றோமேயல்லாமல் வேறல்ல. இந்த 118 கோடி ரூபாய் அல்லது 108 கோடி ரூபாய் அதுவும் இறுதி வடிவமானதா என்றால், அதுவும் இல்லை; அதுவும் சந்தேகத்திற்குரிய விஷயம். 129-ம் இல்லை; 108, கோடி ரூபாயா 118 கோடி ரூபாயா, அதுவும் தெரியவில்லை; எப்போது முடிவாகும்? அதுவும் புரியவில்லை! இந்தச் சூழ்நிலையில் நாம் குறை கூறுவதில் எந்தவிதமான தவறும்இல்லை யென்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்வேன். நேற்றைய தினம் நண்பர் திரு. ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் இன்னொன்றைச் சுட்டிக் காட்டினார்கள். நான் பேரவையிலேயும்கூட அது பற்றிக் குறிப்பிட்டேன்! 'Upgraduation Grant' என்பதாகும். அதிலே வார்த்தைகளைப்பற்றி எல்லாம்கூட அவர்கள் சொன்னார்கள். நான் அந்த அளவுக்கு அதிலே நுழைய விரும்பவில்லை. ஆனால் அந்த Grant, அந்த மானியம், நிர்வாகத்தைச் சீரமைத்து, மேம்படுத்தும் மானியம்—அதைத் தமிழிலே அப்படித்தான் மொழி பெயர்க்க வேண்டும்—நிர்வாகத்தைச் சீரமைத்து, மேம்படுத்தும் மானியம் என்கின்ற ஒரு புதுத் தலைப்பு. அது எதற்குப் பயன்படுகிறதென்றால், கல்வித்துறை, மருத்துவத் துறை போன்றவைகளில் எந்த மாநிலம் அதிகம் இதுவரையிலே செலவழிக்காமல் இருக்கிறதோ அந்த மாநிலத்திற்கு ஒரு புதுத் தலைப்பில் மானியங்களை ஒதுக்குவதற்காகச் செய்யப்பட்டிருக்கின்ற புதிய ஏற்பாடு. இந்த 6-வது நிதிக் குழு செய்திருக்கின்ற புதிய ஏற்பாடு, அது! நாம் செய்த தவறு என்ன தெரியுமா? கல்விக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும் அதிகமாகச் செலவிட்டுவிட்டோம். அந்தக் குற்றத்திற்குப் பெரிய தண்டனை, நமக்கும், கேரளத்திற்கும், குஜராத்திற்கும், மராட்டியத்திற்கும் அந்த மானியம் கிடையாது என்று மறுக்கப்பட்டு விட்டது. யாருக்குப் பரிசு

அளிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? இத்தனை ஆண்டு காலமாகக் கல்விக்கும், மக்கள் நல்வாழ்வுக்கும், அதிகம் செலவிடாமல் சோர்ந்து கிடந்த உத்திரப் பிரதேசத்திற்கு 290 கோடி ரூபாய். அவர்கள் நேற்று மாநில விவரங்களைச் சொல்லவில்லை-பீஹாருக்கு 166 கோடி ரூபாய்; மேற்கு வங்கத்திற்கு 72 கோடி ரூபாய்; ஒரிஸ்ஸாவுக்கு 57 கோடி ரூபாய்; ஆந்திரத்திற்கு 52 கோடி ரூபாய் மத்தியப் பிரதேசத்திற்கு 50 கோடி ரூபாய்; மைசூருக்கு 27 கோடி ரூபாய். அந்தப் புதுத் தலைப்பில் நிர்வாகத்தைச் சீர் திருத்தி மேம்படுத்தும் மானியம் என்ற தலைப்பில் இவ்வளவு தொகை அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாடும், கேரளமும், குஜராத்தும், மராட்டியமும் புறக்கணிக்கப் பட்டு இருக்கின்றன. இல்லையென்று கை விரிக்கப்பட்டிருக்கிறது. இதை நாம் சுட்டிக் காட்டுவது தவறு என்று சொல்லுகிற நேரத் தில், எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் குறை கூறுவதா என்று கேட்டுவிடுவோமேயானால், மத்திய சர்க்காருக்கு மறை முகமாக ஆதரவு தந்து, ''நீங்கள் கொடுக்காமல் இருந்தது நல்லது தான், அதற்கு ஒரு சபாஷ் போடுகிறோம்'' என்று கூறுவதைப் போல் ஆகிவிடும். ஆகவே, இதுபோன்ற விஷயங்களிலாவது எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியோடு சேர்ந்து, நம்முடைய மாநிலத்திற்கு அதிகத் தொகை பெற்று, நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்கின்ற வேண்டுகோளை நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன் னென்று... நாம் பல வரிகளில் பங்குத் தொகை பெற்று வருகிறோம். சொல்லப்படுகின்ற வாதமே, மத்திய சர்க்காருக்கு எங்கிருந்து பணம் வரும்; அவர்கள் என்ன செய்வார்கள் என்றெல்லாம் மத்திய சர்க்காருக்காகக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, எந் தெந்த வகையில் நமக்குப் பணம் அவர்கள் ஒதுக்கலாம் என்பதைப் பற்றியும் நாம் சிந்தித்தாக வேண்டும் என்பதையும் நான் சுட்டிக் காட்டுவேன். நம்முடைய அரசின் சார்பாக நீண்ட நாட்களாக, கடந்த 2, 3 ஆண்டுகளாக என்றுகூடச் சொல்லலாம், தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்திலும், திட்டக் குழுவினிடத்தில் பேசு கின்ற நேரத்திலும், நிதிக் குழுவிடத்திலே பேசுகின்ற நேரத்திலும் வலியுறுத்தி ஒன்றைச் சொல்லி வந்திருக்கின்றோம். 'கார்ப்ப ரேஷன் டாக்ஸ்'—நிறுவனங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரி. அந்த வரியும் வருமான வரியைப்போல நம்முடைய மாநிலங் களுக்குப் பகிர்ந்து தரப்பட வேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தை நாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். கார்ப்பரேஷன் டாக்ஸ் என்று சொன்னதைத் தவருகக் கருதிக் கொள்ளக்கூடாது. மாநகராட்சி டாக்ஸ் என்று கருதிக் கொள்ளக் கூடாது. மாநக ராட்சி டாக்ஸ் என்று எடுத்துக் கொள்ளக்கூடாதென்பதற்காகத்

தான் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகின்ற வரி என்று சொன்னேன். 6-வது நிதிக் குழுவினுடைய அறிக்கையிலேகூட,

"In reviewing the forecast of resources of Central Government, as presented to us by the Union Ministry of Finance, we cannot help observing that there are some areas in which, given the right policies and the requisite determination, savings on a significant scale can be effected, thus liberating more resources for meeting the pressing needs of the States."

இது நாம் இங்கு எடுத்துச் சொன்ன—சிலம்புச் செல்வர் அவர்கள் சொன்னாரே, இரட்டை இலாகா அங்கே இருக்கிறதென்று—அந்த இரட்டை இலாகாவின் மூலம் ஏற்படுகின்ற, சிக்கனச் சீரழிவு; இதை 6-வது நிதிக்குழு, நாம் பலமுறை எடுத்துச் சொன்னதை, அவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு வேளாண்மைத் துறைக்கு அங்கே ஒரு அமைச்சகம் இருக்கிறது; அதைப்போலவே கல்வித் துறைக்கு ஒரு அமைச்சகம் இருக்கிறது; மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அங்கே ஒரு அமைச்சகம் இருக்கிறது. இவைகள் எல்லாம் டியூப்ளிகேஷன். இந்த இரட்டை இலாகாக்கள் எல்லாம் தேவையில்லை என்பதை இதே மாமன்றத்தில் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வீற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை, பல்வேறு உதாரணங்களின் மூலமாக எடுத்துக் காட்டி, இந்த இரட்டை இலாகா முறை தேவையில்லை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த நிதி ஆணைக்குழுவும், நான் படித்துக் காட்டிய இந்த வாசகங்களை அந்த அறிக்கையிலே குறிப்பிட்டு, மத்திய அரசினுடைய சார்பிலே அவர்கள் கொஞ்சம் சிக்கனப் படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது, அந்த இரட்டை இலாக்காக்களுக்காகச் செலவழிப்பதை, குறைத்துக் கொள்வார்களேயானால், மாநில அரசுகளுக்கு அதிகமாக வழங்க முடியும் என்கின்ற அந்தக் கருத்தை அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். அதைப் போலவே, நான் தொடக்கத்திலே சொன்ன இந்த 'கார்ப்பரேஷன் டாக்ஸ்' ஸை-அதைப் பொறுத்தவரையிலும் கூட நிதிக்குழுவினுடைய அறிக்கையில் அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு, காாப்பரேஷன் டாக்ஸ்ஸை-மாநிலங்களுக்குத் தரலாம்; அதுபற்றி என்.டி.சி. கூட்டத்திலே விவாதிக்கலாம் என்கின்ற கருத்தையும், அவர்கள் அவர்களுடைய அறிக்கையிலே. ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆறுவது நிதிக்குழு-நிதி ஆணைக்

குழு நம்முடைய கருத்தை ஏற்றுக்கொண்டு, 'கார்ப்பரேஷன் டாக்ஸ்ஸை' மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிப்பதைப்பற்றி விவாதிக்கலாம் என்று சொல்லியிருக்கின்ற கருத்தை, வருகின்ற என்.டி.சி. கூட்டங்களில் ஆராய வேண்டும் என்று நான் பிரதமருக்கும், திட்டக்குழு அமைச்சர் அவர்களுக்கும், நிதியமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய தமிழக அரசின் சார்பில் கடிதம் மூலமாக இன்றையத் தினம்கூட எழுதியிருக்கின்றேன். ஆகவே ஒரு நல்ல சுமுகமான—நாமெல்லாம் விரும்புகின்ற முடிவினை மத்திய அரசு, அதனுடைய அமைச்சர், இந்தத் துறையினர் அனைவரும் ஏற்றுக்கொண்டு மாநிலங்களுக்குக் 'கார்ப்பரேஷன் டாக்ஸை' பகிர்ந்தளிக்க முன்வருவார்கள் என்றும் நான் நம்புகின்றேன்.

இப்படிப்பட்ட காரியங்களில் எதிர்க்கட்சியிலே உள்ள உறுப்பினர்கள், எதற்கெடுத்தாலும் மத்திய அரசிடத்திலே எதிர்பார்ப்பது, மத்திய அரசிடத்திலே கேட்பது என்கின்ற முறை இருக்கக் கூடாது, நீங்கள் என்ன செய்தீர்கள்? என்ற கேட்கின்ற நேரத்தில், சற்றுச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிந்திக்க வேண்டுமென்று சொல்வதால் கோபித்துக் கொள்ளக் கூடாது. சிந்தித்தாலும்கூட, ஆளுங்கட்சியைக் குறைகூற வேண்டும் என்பதற்காக, ஏதாவது சொல்ல வேண்டும் என்கின்ற கருத்திலே சொல்லவும்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள். ''உரம் கிடைக்கவில்லை' தெரிகிறது; இருந்தாலும் நீங்கள் என்ன செய்தீர்கள்'' என்று கேட்டார்கள். என்ன



செய்ய வேண்டுமென்று சொல்கிருர்கள்? நான் எழுந்து கேட்டால் அவர்களால் சொல்ல முடியாது. என்ன செய்ய முடியும்? இந்திய அரசைக் கேட்டால், ''உலகத்திலேயே உரம் பற்றக் குறை'' என்று சொல்லுகிருர்கள்.


திரு. கே. ராசாராம் நாயுடு: மக்களின் குறையை இங்கு எடுத்துச் சொல்வதற்குத்தான் நாங்கள் இருக்கின்ருேம். அதற்கான ஒரு வழியை அரசாங்கத்தை நிர்வகிப்பவர்கள் நடத்தி, எப்படியாவது முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ருேம். எங்கள் கடமையை நாங்கள் செய்துவிடுகின்ருேம். உங்களுடைய கடமையை நீங்கள் செய்யுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: குறைகளை மக்களே சொல்லுகிருர்கள். அதற்கு வழி சொல்ல வேண்டியதுதான் எதிர்கட்சியினுடைய பொறுப்பு. குறைகளைச் சொல்ல மக்களே போதும். என்ன......

திரு. ஒய். வெங்கடேஸ்வரா தீட்சதர்: கொடுத்த உரத்தை 'ஈக்வி டிஸ்டிரிபியூஷன்' செய்யவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: தீட்சதர் அவர்கள் அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டார்கள். குறைகளைச் சொல்வது, மக்கள் சொல்லுகிருர்கள், அதை எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்கிருர்கள். அந்தக் குறைகளை இங்கே வந்து சொல்வது மாத்திரமல்லாமல், அதற்கு இன்ன வழி வகைகளைக் கையாளலாம் என்று சொல்வதும் எதிர்க்கட்சிகளினுடைய பொறுப்பாகும். சில எதிர்கட்சித் தலைவர்கள்—நான் இவரைச் சொல்லவில்லை—இதற்கு என்ன வழிவகை என்று கேட்டால், 'ஆளும் கட்சிக்கு வரும்போது சொல்லுகின்றேன்' என்று சில பேர் சொல்லுகிருர்கள். நாங்கள் இதை அனுபவ ரீதியாகப் பேரவையிலே பார்த்துக் கொண்டிருக்கின்ருேம். ஆகவேதான் வழி வகைகளைச் சொல்ல வேண்டும். தீட்சதர்அவர்கள் சொன்ஞர். சரியாக வினியோகிக்கப்படவில்லை என்று. இங்கே பேசிய சித்ரா நாராயணசாமி அவர்கள்கூடப் பேசினுர்கள்-நான் அவையிலே இல்லாவிட்டாலும், எல்லாருடைய பேச்சுக்களையும் படித்துப் பார்த்தேன். அதிலே அவர்கள்கூடச் சொல்லியிருக்கிருர்கள், ''கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக உரம் வழங்கும்போது தவறு நடைபெறவில்லையா? தனியார் உரங்களை வினியோகம் செய்தால் அவர்கள் மாத்திரம் நம்பிக்கையற்றவர்களா?'' என்கின்ற ஒரு கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிருர்கள். அந்தக் கேள்வி, நியாயமான கேள்வி. ஆனுல், இந்த அரசைப்

பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறை மூலமாக வினியோகிக்கப் படுகின்ற உரத்தின் அளவு எவ்வளவு? தனியார் துறை மூலமாக வினியோகிக்கப்படுகின்ற உரத்தின் அளவு எவ்வளவு? என்பதைத் தெள்ளத் தெளிவாக, சென்ற முறை நான் விளக்கமாகக் கூறி யிருக்கின்றேன். மிகக் குறைந்த, கிட்டத்தட்ட 34 சதவிகிதம் தான் அரசின் மூலம், கூட்டுறவுத் துறையின் வாயிலாக வினி யோகிக்கப்படுகிறது.




திரு. கே. ராசாராம் நாயுடு: முதலமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் போட்ட திட்டப்படி தனியார் துறையில் வினியோகிக்கட்டும்! ஆனால், அந்தத் தனியார் துறைக்குக் கொடுக்கும் அந்த உரத்தைக்கூட, நம்முடைய மேற்பார்வையில் ஏன் வினியோகிக்கக்கூடாது. நம் முடைய மேற்பார்வையில் ஏன் கொண்டுவரக் கூடாது? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஏன் செய்யக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் கேட்கின் றோம் தனியார் துறையிலேகூட வினியோகிக்கட்டும். 66 சதவீதம் வினியோகிக்கிறார்கள். அதை அப்படியே கொடுத்து

விடுங்கள் என்பது ஒரு வாதம். அரசாங்கத்தினிடத்திலே கொடுத்து விடுங்கள். மொத்த உர வினியோகத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பது ஒரு வாதம். அதிலே, கூட்டுறவுத் துறையில் தவறு நடக்கவில்லை என்று சொல்லமாட்டேன், ஒன்றிரண்டு இடங்களிலே நடக்கலாம். அப்படி நடக்கும்பொழுது, அவர்களை கண்டிக்க, தண்டிக்க, அவர்கள் மீது அதிகாரம் செலுத்த எந்த நடவடிக்கை எடுக்க அரசிற்கு உரிமை இருக்கிறது, அதிகாரம் இருக்கிறது? ஆனால், தனியார் துறையிலே உரத்தைப் பெற்று, அதிக அளவு உரத்தைப் பெற்று, 66 சதவீதம் உரத்தைப் பெற்றுத் தவறு செய்கின்ற நேரத்தில், அதை அடக்குவதற்கோ அல்லது அவர்களுடைய உரிமையை ரத்துச் செய்வதற்கோ அதிகாரம் மாநில அரசிற்குக் கிடையாது; அதைத்தான் மாநில அரசிற்குக் கொடுங்கள் என்று, மத்திய அரசைக் கேட்கிறோம். பல நாட்களாகக் கேட்கிறோம். பல திங்களாகக் கேட்கிறோம். சட்ட சபையிலே அதைப்பற்றி பேசிக் கேட்டோம். நேரிலும் கேட்டோம். ஆனால் அந்த அதிகாரம் இன்று வரையிலே மாநில அரசுக்கு வழங்கப்படவில்லை. ஆகவேதான் உர வினியோகத்திலே ஏற்படுகின்ற—தனியார் துறைமூலமாக ஏற்படுகின்ற, தவறுகளில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அவர்களிடமிருந்து அந்த உரத்தைப் பெற்று வேறு ஒருவர் மூலமாக வினியோகித்து நல்ல முறையில் விவசாயிகளுக்குப் போய்ச் சேரவும், ஆன சூழ்நிலையை நாம் ஏற்படுத்த முடியவில்லை. பாமர மக்களுக்கு, கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுக்கு, இவ்வளவு பெரிய விஷயங்கள் நிச்சயமாக அவர்களுடைய இதயத்தைத் தொடவோ, அவர்களுடைய காதுகளுக்கு எட்டவோ, அவர்கள் சிந்தித்துப் பார்க்கவும் கூடிய அளவுக்கு இந்த விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படுவது கிடையாது. ஏனென்றால், அவர்களுக்கு நெருக்கமாக இருக்கின்ற அரசு, மாநில அரசுதான். ஆகவே அவர்கள் உடனடியாகக் குற்றம் சாட்டுவது மாநில அரசைத்தான் குற்றம் சாட்டுவார்கள். ஆனால் அவர்களிடத்தில் எல்லாம் நாம் எடுத்துச் சொல்லியாக வேண்டும். இதிலே கட்சி பேதமில்லாமல் எடுத்துச் சொல்ல வேண்டும். இதில் என்ன அரசியல் நோக்கம் வந்துவிடும் என்றால், மாநில அரசு மீது இங்கே இருக்கின்ற மக்களுக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஏற்பட்டால், அவர்களை மாற்றிவிட்டு, நம்மை வந்து உட்கார வைத்துவிடுவார்கள். அப்படி உட்கார ஆசைப்படுகின்ற எதிர்கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். எதற்குத் தெரியுமா? இந்த திட்டத்தை நீங்கள் வாங்கிக் கொள்வதற்காகத்தான் அங்கே உட்காரப் போகிறீர்களே அல்லாமல், வேறல்ல. இதைத்தான் சொல்லப் போகிறார்கள். பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டியாக வேண்டும்.

இன்றைக்கு மத்திய உறவுகள் சீர்பட வேண்டும் என்பதிலும், மாநிலங்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரங்கள் வரையறுக்கப் பட வேண்டும் என்பதிலும் நாம் காட்டுகின்ற அக்கறை, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் எப்போதும் இருக்கப் போகிறது; ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசிற்கு அந்த அதிகாரங்கள் வேண்டும் என்பதற்காக அல்ல. நாளைக்கு இந்த ஆட்சிபீடத்தில் வந்து உட்காரப் போகின்றவர்களுக்கும் சேர்த்துத் தான் நாம் கேட்கின்றோம். அதை மறந்துவிடக்கூடாது. மாநில அரசுக்குத்தான் அதிகாரங்களை நாம் அதிகமாகக் கேட்கின்றோமே யல்லாமல் வேறல்ல, என்பதையும் நான்.........


**திரு. கே. ராசாராம் நாயுடு:** *(அமர்ந்துகொண்டு)* எல்லா மாநிலங்களுக்கும் வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்கள் திருத்தத்தோடு ஆதரிக்கிறார்கள்.

**திரு. கே. ராசாராம் நாயுடு:** *(அமர்ந்துகொண்டு)* எல்லா மாநிலங்களுக்கும் என்றால் நாங்கள் ஆதரிக்கின்றோம். தமிழ் நாட்டுக்கு மட்டும் கேட்டால் ஆதரிக்க மாட்டோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லா மாநிலத்திற்கும் சேர்த்துக் கேட்டால் ஆதரிப்பதாகச் சொல்கிறார்கள். எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் கேட்கிறோம். ஆனால் எனக்கு இருக்கிற சங்கடம், திரு. ராசாராம் நாயுடு அவர்கள் இங்கே ஆதரித்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்களுக்கு மேலே இருக் கிறவர்கள், அதை ஆதரிக்கிறார்களா என்பதுதான் எனக்குத் தெரி யாத ஒரு புதிராக இருக்கின்றது. அவர்களையும் ஆதரிக்கச் சொல்லுகின்ற அளவுக்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரைப் போன்றவர்கள் அவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லி, ஒரு இயக்கத்தின் சார்பாகவே, ஆண்ட-அனுபவித்த கட்சியின் சார் பாகவே இவைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். நாங்கள் ஐந்தாண்டுக் கால நிருவாகத்தில் மத்திய அரசால் ஏற்படுகின்ற சீர்கேடுகளை எல்லாம் நாங்கள் உணர்ந்து, அவைகளை எதிரொலிக் கின்றோம். 20 ஆண்டுக்காலம் ஆட்சி செலுத்தியவர்கள், மத்திய அரசின் மூலமாக எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து, உண்மைகளை உணர்ந்து, தி.மு. கழக அரசின் சார்பிலே எடுத்துச் சொல்லப்படுகின்ற விஷயங்கள் உண்மைதான், என்கின்ற அளவுக்கு உதவிகரமாக எங்களுக்கு இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின் றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சில பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையென்று நான் கருதுகின்றேன். நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தமிழுக்கு, அதன் வளர்ச்சிக்கு, ஒரு தொகை இதிலே ஒதுக்கப்படவில்லை என்பதைத் தம்முடைய மனக்குறையாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களே அதற்கு ஒரு சமாதானமும் சொல்லிக் கொண்டார்கள். கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பெருந்தொகையில் தமிழுக்கும் போய்ச் சேருகிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், தமிழுக்கு என்கின்ற தனித் தலைப்பில் அந்தக் காரியம் நடைபெற




வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். தமிழுக்காக, தமிழர்களுக்காக, தமிழ்ச் சமுதாயத்துக்காக, தமிழ் மரபு காக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழர்களுடைய நாகரிகம், கலாசாரம், பண்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக நம்முடைய சிலம்புச் செல்வர் போன்றவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற எந்தக் காரியமானாலும், அவைகளை இந்த அரசு தட்டிக் கழித்ததில்லை என்பதை நாடு நன்றாக உணரும். ஆகவே வெகு விரைவில் தமிழுக்கு ஒரு தனித்தொகை ஒதுக்குகின்ற அளவுக்கும், தமிழின் மேம்பாட்டுக்காக அந்தத் தொகை பயன்படுகின்ற அளவுக்கும் நிச்சயமாக ஒரு தனித் தலைப்பிலே தொகை ஒதுக்கப்படும் என்பதையும், அதுபற்றிப் பரிசிலித்து விரைவிலே அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய அடிகளார் அவர்கள் பேசுகிற நேரத்தில், பாவாணர் அவர்களுடைய 'அகர முதலி' என்கின்ற அகராதியைத்

தயாரிப்பதற்கு அரசு நல்ல முறையிலே உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அது குறித்துப் பாவாணர் அவர்களிடத்தில் தொடர்பு கொண்டபோது, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பல விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதற்கு ஆகின்ற செலவு, இன்றைக்கு அதிகமாகத் திட்டம் போட்டுக்காட்டப்படுகின்ற காரணத்தினாலேதான் தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. அடிகளார் அவர்கள் மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஒரு குறிப்பிட்ட தொகைக்குள்ளாக இந்த அகராதியைத் தயாரித்துக் கொடுப்பதற்கு அவர்கள் பாவாணரோடு தொடர்பு கொண்டு முன்வருவார்களானால்,—அந்த அகராதி; 'அகர முதலி' என்பது, ஏதோ இன்னும் 10 ஆண்டுக்காலம் இருபதாண்டுக்காலத்தோடு முடிந்துவிடுகிற விஷயம் அல்ல, பல நூற்றாண்டுக் காலத்திற்கு, ஆயிரமாண்டுக் காலத்திற்குப் பிறகும் பயன்படக்கூடிய ஒரு பெரிய முயற்சி என்கின்ற காரணத்தால்—அதற்கு இந்த அரசு உதவிடச் சித்தமாக இருக்கிறது என்கின்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. செ. முத்துசாமி: இந்த 'அகர முதலி' என்ற அகராதியைப் பொறுத்தவரையில் நீண்ட ஒரு பெரிய தொகையாகப் போட்டுக் காட்டப்படுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். அப்படி என்ன தொகை போட்டுக் காட்டப்படுகிறது என்பதை அவர்கள் இப்பொழுது கூறுவார்களா? இப்பொழுது என்ன திட்டத்திலே என்ன செலவு என்று போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைக்கூறி, அதைப் பற்றி ஒரு விவாதம் இப்போது நடத்த வேண்டாம் என்று நான் விரும்புகின்றேன். அது பரிசீலனையில் இருக்கிறது. நல்லவிதமாக முடிவெடுக்கப்படும். ஆகவே அவைகளையெல்லாம் இப்பொழுது கிளறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. செ. முத்துசாமி: விவாதத்திற்காக நான் கேட்கவில்லை. தமிழை வளர்ப்பதற்காக எடுக்கக்கூடிய முயற்சிகளிலே பாவாணர் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, ஒரு பெரிய முயற்சியிலே ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள். மொழி வளர்ச்சியிலே அக்கறை இருக்கக்கூடிய அரசு அந்தச் செலவினத்தைப்பற்றிக் கவலைப்படாமல், அதைப்பற்றி மீண்டும் மீண்டும் காலம் தாழ்த்தாமல், அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்; முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு:** விவரம் கேட்கிறது விவாதத்திற்குக் கொண்டு போய்விடக் கூடாது என்றுதான் அவர் பதில் சொன்னார். மறுபடியும் அதை இப்படித் திருப்பிக் கேட்கிறீர்கள்!

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது நடைபெறும் என்று கூறியபிறகு, அதுபற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அது கல்வியமைச்சர் நாவலர் அவர்களும், அடிகளார் அவர்களும் பாவாணர் அவர்களோடு தொடர்பு கொண்டு அதுபற்றி ஒரு நல்ல முடிவை விரைவிலே அறிவிப்பார்கள் என்பதை மாத்திரம் நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனை ரத்துச் செய்ததைச் சுட்டிக்காட்டி, எதிர்க்கட்சியிலே உள்ளவர்களும், ஆளுங் கட்சியிலேயும் நம்முடைய வெங்கா போன்ற மாண்புமிகு உறுப்பினர்களும், மற்றவர்களும் விவசாயிகளுக்குள்ள கடனையும் ரத்துச் செய்ய வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நெசவாளர்களுக்கு எந்த நிலையிலே கடன் கொடுக்கப்பட்டது என்பதையும், விவசாயிகளுக்கு எந்தச் சூழ்நிலையிலே கடன் கொடுக்கப்படுகிறது என்பதையும் எண்ணிப் பார்த்தால், இரண்டையும் ஒப்பிட்டு, அதைப் போலவே இதையும் ரத்துச் செய்துவிடுங்கள் என்கின்ற வாதத்தை அவர்கள் எழுப்பமாட்டார்கள் என்று கருதுகின்றேன். நெசவாளர்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட கஷ்டத்தில் காரணமாக, அவர்களுடைய வீடுகளில் வேதனை குடிகொண்டபோது, உடனடி நிவாரணமாக ஒரு கோடி ரூபாய்—தலைக்கு 100 ரூபாய் வீதம்—அளிக்கப்பட்டது. அதை ரத்துச் செய்வதாக அறிவித்திருக்கிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடன் அப்படி அல்ல. அவர்கள் பயிர் செய்து, விளைவித்து, பயன் பெறுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன். அந்தக் கடனையெல்லாம் ரத்துச் செய்துவிடுவோமேயானால், பிறகு ஒவ்வொரு முறையும் விவசாயி கடன் வாங்கும்பொழுதெல்லாம் ரத்துச் செய்துவிடுவார்கள் என்ற நினைப்போடு அவர்களும் கடன் வாங்குவார்கள்; அவர்கள் கொடுக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தோடு நாமும் கொடுக்காமல் இருந்து விடுவோம். ஆகவே வேளாண்மைத் துறைக்கு ஏற்றதல்ல அந்தக் கருத்து என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.




எதிர்க்கட்சித் தலைவர், ''பொற்கொல்லர்களுக்குள்ள கடனை, நெசவாளர்களுக்கு ரத்துச் செய்ததைப்போல், 'ரத்து செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். ஏற்கெனவே சட்டமன்றத்திலே சட்டப்பேரவையிலே இதுபற்றி ஒரு கேள்வி எழுந்தபோது நான் பதிலளித்திருக்கின்றேன். பொற்கொல்லர்களுக்கு உள்ள கடன் அனைத்தையும் ரத்துச் செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது. கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் கடன் தர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதிலே பாதித் தொகையை-பொற்கொல்லர் கடனே எந்தச் சட்டத்தால் வந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார். அந்தச் சட்டத்தின் காரணமாக வந்த கடன் அது; அதற்காகப் பொற்கொல்லவர்களுக்குத் தரப்பட்டது. இப்பொழுது மத்திய அரசு அந்தக் கடனை நாம் ரத்துச் செய்கிற நேரத்தில் மத்திய அரசும் பாதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றோம். எப்படியும் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டோ ஏற்றுக் கொள்ளாவிட்டால்' நாமே முழுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டோ, பொற்கொல்லகளுடைய கடன் ரத்துச் செய்யப்படும் என்ற உறுதியை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதைச் சட்டப் பேரவையிலேயே கேள்வி நேரத்திலே நான் சூசகமாக அறிவித்திருக்கின்றேன். ஏனென்றால் அவர்கள் அங்கே அறிவிக்காமல் இங்கே அறிவித்து விட்டேன் என்று குற்றம் கூறக்கூடும் என்பதற்காக நான் சொல்கிறேன். அதன் தொடர்ச்சியாகத்தான் இதை இங்கே குறிப்பிட்டேன்.

**திரு. கே. ராஜாராம் :** இந்த மாதிரி அடிக்கடி அதுதான் சட்டசபை, இது ஏதோ உபரிசபை மாதிரி நினைக்கிறது தப்பு. இரண்டும் 'ஈக்வல் ஸ்டேடஸ்' இரண்டு சபையும் ஈக்வல் ஸ்டேடஸ் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** எதிர்க்கட்சித் தலைவர் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த ஒரு கருத்தில் இருவரும் உடன்பட்டதற்காக மகிழ்கிறேன். காவிரிப் படுகையி லே எண்ணெய் வளம் கண்டுபிடிப்பு முயற்சி எந்த வகையிலே இருக்கிறது என்கின்ற ஒரு கேள்வியை நம்முடைய நண்பர் வசந்த பாய் அவர்கள், அவர்களுடைய உரையிலே எழுப்பினார்கள். இந்த எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிப்பதற்காக இந்திய அரசினுடைய எண்ணெய் இயற்கை வாய்வு ஆணைக் குழு ஒன்று, கடந்த 1958-ஆம் ஆண்டிலேயிருந்து நம்முடைய மாநிலத்தில், நாகை, திருப்பூண்டி, சிதம்பரம், சாலியமங்கலம், காட்டுமன்னார்கோவில் ஆகிய இடங்களில் துளையிடும் பணியை மேற்கொண்டு, இதுவரை யிலே 10 இடங்களில், அதுபோன்ற கிணறுகளைத் தோண்டியது ஆனால் குறைந்த அளவிலேதான் எண்ணெய் கிடைத்தது. அதிக அளவில் எண்ணெய் கிடைக்கவில்லை. தொடர்ந்து கடலோரப் பகுதிகளிலும் சோவியத் நாட்டினுடைய ஆய்வுக் கப்பல்கள் எண் ணெய் கிடைப்பதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவா என்று அவைகளும் ஆராய்ச்சி நடத்தி, அந்த வாய்ப்புக் கூறுகளும் ஓரளவிற்குத்தான் இருக்கின்றன. அதிக அளவிற்கு எண்ணெய் கிடைக்கவில்லை என்ற முடிவுகள்தான் இதுவரையிலே வந்திருக்கின் றது. ஆயினும் தொடர்ந்து காரைக்கால், மாயூரம் பகுதிகளிலே இந்திய அரசினுடைய எண்ணெய் குழுவினர் இந்தப் பணிகளை நடத்தி வருகின்றார்கள் என்ற விளக்கத்தை மாத்திரம் நண்பர் வசந்த பாய் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன்.

நம்முடைய நண்பர் சுந்தரேசத் தேவர் அவர்கள் நேற்றையத் தினம் பேசும்போது, ''மாநில திட்டக்குழு என்ன என்ன வேலை களைச் செய்திருக்கிறது? 'விவர அறிக்கைகள் சபையிலே வைக்கப் படவில்லை'' என்றெல்லாம் சொன்னார்கள். அதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். மாநில திட்டக் குழுவினுடைய வரைவு அறிக்கையும் மாநில திட்டக் குழு விற்கு அளிக்கப்பட்ட துணைக் குழுக்களுடைய—டாஸ்க் ஃபோர்ஸ்' —அறிக்கைகளும், இந்த மாமன்றத்திலேயுள்ள உறுப்பினர்களுக்கு

ஏற்கெனவே வழங்கப்பட்டிருப்பது நினைவிருக்கலாம் என்று கருது கிறேன். முழுமையான மாநில திட்டக் குழுவினுடைய அறிக்கை விரைவிலே வைக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள் கின்றேன். திட்டங்கள் மாவட்ட அளவிலும் செயல்படுத்தப்பட வேண்டும், மாநில மாவட்ட அளவிலும் தீட்டப்பட வேண்டும் என்கின்ற கருத்தை ஏற்கெனவே இந்த அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கான வழி வகைகளையெல்லாம் ஆராய்ந்து, அந்தக் காரியங் கள் கவனிக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட வளர்ச்சி வாரியம் அமைக்கப்பட்ட பிறகு, அந்த மாவட்ட அளவிலே தீட்டப்பட்டிருக் கின்ற திட்டங்கள் எல்லாம் அந்த வளர்ச்சி வாரியத்தினுடைய துணையோடு நடைபெறுவதற்கு முதற் கட்டமாக நான்கு மாவட் டங்கள்—தருமபுரி, இராமநாதபுரம், தஞ்சை, கோவை ஆகிய நான்கு மாவட்டங்கள்—தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த மாவட்டத் திட்டங்கள் நல்ல முறையிலே நிறை வேறுவதற்கு இயலும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள் வேன். நண்பர் பலராமன் நேற்றையத் தினம் பேசும்போது 'சிப்காட்' என்று ஒரு நிறுவனம் அறிவிக்கப்பட்டதே, அது எங்கே இருக்கிறது, ஏதாவது நடக்கிறதா, அதில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டதா?'' என்றெல்லாம் பெரிய சந்தேகத்தை எழுப்பினார் கள். இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் 46.82 கோடி ரூபாய் முதலீடுகளை ஊக்குவித்து, 9,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளை வழங்கியிருக்கிறது, என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குப் பதிலாகத் தரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது வரை அந்த நிறுவனம் 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி களைப் பல திட்டங்களின் கீழ் செய்யப்பட்டிருக்கின்றன. வட ஆர்க் காட்டிலேயிருந்து அவர்கள் சென்னைக்கு வருகின்ற வழியிலே கொஞ்சம் இராணிப்பேட்டைப் பக்கம் திரும்பிப் பார்ப்பார்களே யானால், அங்கே கூட இராணிப்பேட்டையிலே ஐந்து பெரிய தொழிற்சாலை பல நடுத்தரத் தொழிற்சாலைகளும், இந்த 'சிப்காட்' டின் உதவியின் காரணமாக அங்கே தொடங்குவதற்கான வேலை கள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்க முடியும். ஆகவே 'சிப்காட்' என்ன ஆனது என்று கேட்டால் மறுநாள் பத்திரிகைகளிலே கொட்டை எழுத்துக்களிலே வந்து விடுகிறது. அதை மாத்திரம் படிக்கின்றவர்கள், ஏதோ 'சிப்காட்' என்று ஒன்று ஆரம்பித்தார்கள். அது உடனடியாக அழிந்து போயிற்று. தொலைந்து போயிற்று என்கின்ற ஒரு எண்ணத்தை அவர்களுடைய உள்ளத்திலே பதிய வைத்துக் கொள்கின்றார்கள். ஆகவே இது போன்ற விஷயங்களைப் பேசுகிற நேரத்தில் நாம் ஒரு முறைக்கு இரு முறை அதைப் பற்றி தீர்க்கமாக, தெளிவாகக் கேட்டறிந்து அவைகளைப் பற்றிப் பேசுவது நல்லது என்பதற்காகச் சொல்கிறேனே யல்லாமல் வேறல்ல!

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, நான் ஏதோ ஒரு கருத்தைச் சொல்லப்போக, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத் திரித்துக் கூறுகின்றார்கள், என்று நான் கருதுகிறேன்—திசை திருப்புகிறார்கள் என்று நான் கருதுகிறேன். 'சிப்காட்' என்பது இராணிப்பேட்டையில் ஏற்பட்டாலும் அது அபிவிருத்தி ஆகவேண்டும்; 'வட ஆர்க்காடு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். அதில் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பொருள்படத்தான் நான் பேசினேனே தவிர எங்கே என்ற ஒரு கேள்வியை எழுப்பவில்லை. அதை அவர்கள் வேறு திசையில் திருப்புவது நல்லதல்ல என்பதைப் பணிவாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'சிப்காட்' நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதே தவிர எந்தவிதமான தொழில் முன்னேற்றமும் ஏற்படவில்லை' என்று அவர்கள் பேசினார்கள். எந்தத் தொழில் முன்னேற்றமாவது ஏற்பட்டதா என்று அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. கே. இராஜாராம் நாயுடு : 'என் மாவட்டத்தில் ஒன்றும் ஏற்படவில்லை' என்று பேசியிருப்பார்கள்.

திரு. எல். பலராமன் : இராணிப்பேட்டையில் . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இராணிப்பேட்டை வட ஆர்க்காடு மாவட்டம் தானே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான், அந்த அளவிற்கு முன்னேறியிருக்கின்றது என்பதைச் சொல்லுகிறேன். தொழிலதிபர்களுக்கு தொழில் துவக்குவதற்கு பல்வேறு உதவிப் பணிகளைச் செய்து வந்திருக்கின்றது என்ற அளவில் வட்டி இல்லா விற்பனை வரிக் கடன் (Interest free Sales Tax Loan) ரூ. 136·92 இலட்சம் என்கின்ற அளவுக்கு அளிக்கப்பட்டு, அதனால் பயன்பெற்ற தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை எட்டாகும். வரையறுக்கப்பட்ட சொத்துக்களின் மீது கொடுக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 132 இலட்சம். இதனால் பலனடைந்த தொழிற்சாலைகளினுடைய எண்ணிக்கை, பெரிய தொழிற்சாலை 9, நடுத்தரத் தொழிற்சாலை 11, சிறு தொழிற்சாலை 104, ஆக 124 தொழிற்சாலைகள் ஆகும். நிபந்தனைக் கடன் ரூ. 220 இலட்சம் அளிக்கப்பட்டு அதனால் பலனடைந்த தொழிற்சாலைகள் 25 ஆகும். ஆகவே, இது தொழில் முன்னேற்றத்தைக் காட்டுகின்ற அடையாளம்தான் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்

கின்றேன். அவர்களே சொன்னார்கள், நான் அப்படிச் சொல்ல வில்லை என்று. குற்றச்சாட்டுகள் என்ற முறையில் சொல்லவில்லை என்றார்.

இன்னொன்றைச் சொன்னார்கள்—இன்னொரு புகாரை! வட ஆர்க்காடு மாவட்டத்தில் அரிசன மோட்டார் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, ஏழை அரிசனங்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாய் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது, அது என்ன ஆனது? வசூலிக்கப்பட்ட பணத்தின் நிலைமை என்ன? என்றெல் லாம் கேட்டார்கள்.

கேட்டீர்களா, இல்லையா?

திரு. எல். பலராமன் : ஆமாம்!

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதையாவது ஒத்துக் கொண்டீர்கள். அந்தப் பணம் என்னவாயிற்று என்று கேட்டார் கள். அப்படிக்கேட்டு, விட்டுவிடுகிற நேரத்தில் அந்தப் பணம் எப்படியோ தப்பான வழியிலே போய்விட்டது என்கின்ற எண் ணத்தை, அது மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அப்படி அரசு மீது ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியினுடைய குறிக் கோளாக இருக்கவேண்டும்! ஆனால் இப்படி அரசின் மீது ஒரு களங்கத்தைச் சுமத்துகிற அளவிற்கு, கொள்கை அளவிலே, காரி யங்கள் அளவிலே, திட்டங்கள் அளவிலே வேறுபட்ட கருத்துக்களைச் சொல்ல வேண்டுமேயல்லாமல் ஒரு களங்கம் ஏற்படும் அளவிற்குப் புகார்கள் கூறப்படுவது நல்லதல்ல!

வசூலிக்கப்பட்டது உண்மை. அது ஒரு இலட்சம் ரூபாய் அல்ல; 66,923 ரூபாய் பங்கு தன மூலதனமாக வசூலிக்கப்பட்டது. அந்தத் தொகை வேலூர் கூட்டுறவு மத்திய வங்கியில் வைப்பு நிதியாக செலுத்தப்பட்டு இருக்கின்றது. அந்தத் தொகை எங்கும் போய் விடவில்லை. இதற்கு இடையில் அவர்கள் அந்த மோட்டார் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்தப் போகிறார்களா என்பது கேள்விக் குறியாக ஆகி, நாம் தேசிய மயக் கொள்கையைப் பேருந்துகளிலே கொண்டு வந்த பிறகு அதற்கு விதிவிலக்கு வேண்டும் என்று முதலில் கேட்டு, விதிவிலக்கு அளிப்பதற்கு நாம் ஓரளவிற்குச் சம்மதமும் கொடுத்து, பிறகு அந்த விதிவிலக் கும் தேவையில்லை; அதை அவர்கள் நடத்தப் போவதில்லை என்ற முடிவிற்கு வந்த பின்னர், மறுபடியும் அந்தப் பங்குதாரர் களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தப் பணம் எங்கும் போய்விடவில்லை என்பதையும் நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

வேறு பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இந்த நிதி நிலை அறிக்கையின் மீது எடுத்துச் சொல்லி ஆவன செய்ய வேண்டும் என்றெல்லாம் கேட்டு இருக்கின்றார்கள். அவைகள் அனைத்திற்கும் பதில் சொல்வதற்கு, நேரம் இல்லாத காரணத்தினால்—அவைகள் எல்லாம் குறிப்பேடுகளில் ஏறியிருக்கின்றன. அவைகளையெல்லாம் கவனித்து நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதை எடுத்துக்கூறி இந்த உரையிலே விவாதத்திலே கலந்துகொண்ட அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன்.

நான் இந்த அவையிலே ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நீண்ட நேரம் பேசினேன், 11-ஆம் தேதி. அந்தத் தேதியிலே பேசிய பேச்சுக்கள் கூட அகில இந்திய வானொலியில் இடம் பெறாமல் போய்விட்டது. பேசினேன் என்றுகூடச் சொல்லப்படவில்லை. பேசிய பேச்சுக்கு முதலமைச்சர் அவர்கள் நீண்ட நேரம் பேசிய பேச்சுக்கு—ஆசிரியருடைய பிரச்சினை—ஒரு கல்வியினுடைய பகுதியும் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வானொலியிலே இடம் பெறவில்லை என்று கவலைப்பட்டால் நான் மூன்று முறை சொல்லுகிறேன். ஆசிரியர் முத்துசாமி ஆசிரியர்கள் பிரச்சினையை இங்கே பேசினார், பேசினார், பேசினார்.

**திரு. செ. முத்துச்சாமி :** தலைவரவர்களே, நான் பேசியவை ஏற்கெனவே ரெகார்டுகளில் இருக்கின்றன. இப்போது முதலமைச்சர் அவர்கள் பேசினார், பேசினார், பேசினார் என்று மூன்று முறை சொல்வதும் இங்கே ரெகார்டு ஆகியிருக்கிறது. அது அல்ல இப்பொழுது பிரச்சினை. முதலமைச்சர் அவர்கள் ஆசிரியருடைய பிரச்சினைக்கு என்ன பதில் சொல்லுகிறார். என்ன செய்ய இருக்கின்றார்? கல்வி மான்யம் வர இருக்கிறது. இவ்வளவு பெரிய பிரச்சினையைச் சொன்னோம். பத்து ஆண்டுக் கால செலெக்ஷன் கிரேடு . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முத்துசாமி அவர்கள் ஆசிரியர். அவர் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார், ''பொறுத்தார் பூமியாள்வார்'' என்று! பொறுத்திட வேண்டுகிறேன்.

**தமிழரசு**

1—4—1974 இதழின்

இலவச இணைப்பு

13 APR 1974


தமிழரசு
இலவச இணைப்பு